Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி-09 | 26-10-2005 | புதன்கிழமை | ஓசை-251




# பிந்துனுவெவ படுகொலை விசாரணை அறிக்கை ஆசிய மனித உரிமை மையத்தால் வெளியீடு

## சிறிலங்கா அரசின் போக்கிற்கு பலத்த கண்டனம்

(லண்டன்)

***பிந்துனு வெவ தடுப்பு முகாமில் இருபத்திஎட்டு தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக நிறுவப்பட்ட நீதிபதி குலத்திலக தலைமையிலான விசாரணை ஆணைக்குழு வழங்கிய அறிக்கையை ஆசிய மனித உரிமையகம் நேற்று டில்லியில் வெளியிட்டுள்ளது.***

இந்தப்படுகொலை தொடர்பாக சனாதிபதி சந்திரிகாவினால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு தனது விசாரணை அறிக்கையை இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு சனாதிபதியிடம் சமர்ப்பித் திருந்த போதிலும் அந்த அறிக்கை சனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலம் முடிவடையும் தறுவாயில் உள்ள போதிலும் அதனை இது வரை வெளியிடாத நிலையில் ஆசிய மனித உரிமை மையம் நேற்று இதனை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையை ஆசிய மனித உரிமை மையம் இரகசியமாகப் பெற்றதாகக் கூறியுள்ளது. இலங்கையின் இரகசியக் காப்புச் சட்டத்தின் கீழ் அதனை இலங்கையில் வெளியிட முடியாது என்ற காரணத்தினாலேயே அது டில்லியில்

(12ஆம்பக்கம் பார்க்க)

## மாவீரரின் படங்களை கவனமாக பாதுகாக்குக

எதிர்வரும் மாவீரர் நாளை முன்னிட்டுயாராய் இருப்பினும் மாவீரர் பெற்றோரிடம் இருந்து மாவீரருடைய படங்களைப் பெற்றுக்கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது. யார் கேட்டாலும் பெற்றோர் ஆகிய நீங்கள் உங்கள் மாவீரச் செல்வங்களுடைய படங்களை நீங்களாகவோ எவராயினும் கேட்கும் பட்சத்தில் கொடுக்கவேண்டாமென தமிழீழ மாவீரர் பணிமனை பணிமுதல்வர் பொன்தியாகம் கேட்டுள்ளார்.

ஏனெனில் கடந்த காலங்களில் இப்படங்கள் கைமாற்றம் செய்யப்பட்டதால் மழையில் நனைந்து உடைந்து பழுதாகிய நிலை ஏற்பட்டதுடன் திருப்பிப் பெறமுடியாத நிலையும் ஏற்பட்டது. இதனால் இற்றைக்காலவரை கூட அப்படங்களைத்திருப்பிப் பெறமுடியாமல் பெற்றோர் வீண் சிரமமும் அலைச்சலும், மனவேதனையும்

(12ஆம்பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

கடந்த 23ஆம்திகதி சுகயீனம் காரணமாக நாட்டுப் பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர் - குகதாசன்

(சின்னையா குகதாசன்

தச்சன்தோப்பு பிள்ளையார் கோவிலடி, கரவெட்டி தற்போதைய முகவரி - இல 70/10 அரசடி வீதி நீராவியடி, யாழ்ப்பாணம்) என்ற நாட்டுப்பற்றாளரே சாவடைந்தவராவார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# தமிழ்தேசியத்தின் விடுதலைக்காய் பொங்கி எழுந்து குரல் கொடுப்போம்

## வவு.மாவட்ட தமிழ் தேசிய எழுச்சிநாள் ஏற்பாட்டுக்குழு அறைகூவல்

(வவுனியா செய்தியாளர்)

"தமிழ் தேசியத்தின் விடுதலைக்காய் பொங்கி எழுந்து குரல் கொடுப்போம் தேசிய விடுதலைக்காய் நாம் கோலம் கொள்வோம் விரைவாக எங்கள் விடுதலையை வென்றெடுப்போம்" இவ்வாறு வவுனியா மாவட்ட தமிழ் தேசிய எழுச்சி நாள் ஏற்பாட்டுக்குழு அறைகூவல் விடுத்துள்ளது.

நாளை வவுனியாவில் இடம் பெற ஏற்பாடகியுள்ள தமிழ் தேசிய எழுச்சி நாள் நிகழ்வை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறைகூவலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழ் தேசிய இனத்தின் எதிர்காலம் பற்றி நிதானமாய் சிந்தித்துச் செயற்படவேண்டிய காலம் இது.

இலங்கைத்தீவில் சிங்கள பௌத்த பேரினவாத மேலாண்மைக்குள் நீண்டகாலம் வாழ்ந்து நொந்து போய் விடுதலைக்காய் போராடி வருகின்ற இனம் தமிழனம். எமது மூத்த தலைவர்கள் வன்முறைகளற்ற அகிம்சை வழியில் போராடியும் சிங்களத் தலைமைகளோடு ஒப்பந்தங்

(12ஆம்பக்கம் பார்க்க)

## மகிந்தவின் வெற்றிக்கு உழைக்க கொள்கையளவில் இணக்கம்!

பொதுசன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுக்கான கூட்டம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமை யில் சனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்றுள்ளது.

சுமார் நான்கு மணிநேரம் நடைபெற்ற இந்தக்கூட்டத்திற்கு பிரதமர் மகிந்தராஜபக்ஷ சமுகமளித்திருந்த போதிலும் கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே அவர் அங்கிருந்து கிளம்பி தேர்தல் பிரச்சாரக்கூட்டம் ஒன்றிற்கு சென்றுவிட்டதாகத் தெரிய வருகின்றது. இதேவேளை இந்தக் கூட்டத்தின் இறுதியில் சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளையும் வேறுபாடுகளையும் நீக்குவதற்காக திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அந்தத்திட்டம் நிறைவேற்றப்பட அனைவரும் உறுதியாக உழைப்பதெனவும் மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு உழைப்பதெனவும் கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## பிரதியமைச்சர் பதவி விலகல்

சுற்றுலாத்துறை பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா நேற்று தமது பதவியில் இருந்து விலகியுள்ளார்.

இது தொடர்பான கடிதத்தை அவர் நேற்று சனாதிபதியிடம் ஒப்படைத்துள்ளார். இதனையடுத்து ஊடக மாநாட்டை நடத்திய அவர், தாம் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்கவுள்ளதாக குறிப்பிட்டார். (32)

## வவுனியா தமிழ்தேசிய எழுச்சிநாள் குறித்து படைத்தரப்பு -பா.உ கள் இன்று சந்திப்பு

(வவுனியா செய்தியாளர்)

நாளை வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ள தமிழ் தேசிய எழுச்சி நாள் குறித்து படைத்தரப்பிற்கு விளக்கமளிக்கும் நோக்கில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் படைத்தரப்பினரைச்சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

இன்று பிற்பகல் 1.00 மணிக்கு இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் வவுனியா மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ள இச்சந்திப்பில் இராணுவ உயர் அதிகாரிகளும் பொலிஸ் உயர் அதிகாரிகளும் படைத்தரப்பில் இருந்து கலந்து கொள்ளவுள்ளனர்.

இச்சந்திப்பின்போது தமிழ்தேசிய எழுச்சிநாளை மக்கள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கும்போது படையினர் அதனைக்குழப்ப முயலக்

(12ஆம்பக்கம் பார்க்க)

# சு.க.விற்கு உரித்தான பிரதமர் பதவியை வேறொருவருக்கு வழங்கச் சூழ்ச்சி

## - சனாதிபதிக்கு அநுரா அவசர கடிதம்

(கொழும்பு)

பிரதமர் பதவிக்கு பிறிதொருவரை பிரேரிப்பதற்கு அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளேக்கு எந்த விதமான உரிமையும் இல்லை என அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.இது தொடர்பில் சனாதிபதிக்கு அவர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தமிழ் செய்தித்தாள் ஒன்றுக்கு அமைச்சர் ஜெயராஜ் கூறியுள்ள கருத்தை தாம் ஏற்றுக்கொள்ள முடியாது என அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாழ்க்கையில் தாம் என்றும் அறிந்திராத நிர்மல கொத்தலாவல என்ற பிரதியமைச்சர் தொலைக்காட்சி ஒன்றில் தாம் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்கவில்லை எனக் குற்றம் சுமத்தியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திர கட்சியின் மத்திய குழு மற்றும் வருடாந்த கூட்டங்களின் போது ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளேயால் எவ்வாறு மாற்ற முடியும்? என்றும் அநுரா பண்டாரநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

பண்டாரநாயக்க குடும்பத்தினால் பயனடைந்தவர்கள்

(12ஆம்பக்கம் பார்க்க)

## இனந்தெரியாதோர் தாக்குதல் சிறிலங்காப் பொலிஸ் காயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்று மாலை இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் சிறிலங்காப் பொலிசார் ஒருவர் காயமடைந்தார்.

மட்டக்களப்பு ஜெயந்திரபுரம் அந்தோனியார் வீதிக்கு அருகாமையில் வீதிக்காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசார் மீது நேற்று மாலை 5.00 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கித் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலின் போது ஒருவர் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன் பின்பு அப்பகுதிகளில் இராணுவத்தினர் வீதிச் சோதனைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

## பதவி நீடிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சாந்த கொட்டேகொடவிற்கு இரண்டு வருட பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவருக்கான இந்தப்பதவி நீடிப்பை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று வழங்கினார்.

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

கமல் திரையங்கிற்கும் பயண அனுமதிவழங்கும் செயலகத்திற்கும் இடையில் NPJV 9282 இலக்க முடைய மோட்டார் சைக்கிளின் சிறி லங்கா காப்புறுதி வரி அட்டை, ஆயப் பகுதி புத்தகச்சான்று என்பன 25.10.2005அன்று தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகிறார். (6886)

### இறப்பர் முத்திரை

பொலிமர் இறப்பர் முத்திரை உடன்செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம் வாணி புத்தகசாலை (பிக்பென்ஸ்) கனகபுரம் டிப்போ வீதி கிளிநொச்சி. (13022)

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

**MS.Word,**
**MS-Excel, MS-Access,**
**MS-Powerpoint, Windows.**

**வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**

தொடர்புகளுக்கு:-வின்நெற் கணணி பயிற்சிநிலையம், டிப்போவீதி, கிளிநொச்சி. (சி.13074)

### சலுகை விலையில்

**யாழ்-கொழும்பு விமானக் கட்டணம்.**

### சலுகை விலையில்

**கொழும்பு சென்னை விமானக் கட்டணம்.**

**லண்டனுக்கு 1 kg மிகக் குறைந்த பார்சல் 600 ரூபா**

**தொடர்புகொள்ள வேண்டிய முகவரி**
**MANOJ AIR TOURS PVT LTD**
**32 மணிக்கூட்டு வீதி**
**யாழ்ப்பாணம்.**
**0212223916** (சி.13111)


# கிளிநொச்சி மக்கள் வங்கியின் செயற்பாடுகள் கணனி மயம்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மக்கள் வங்கி செயற்பாடுகள் நவம்பர் மாதம் முதல் கணனி முறை செயற்பாடாக முழுமையாக மாற்றப்படவுள்ளது.


மேற்படி நடவடிக்கையினை முன்னெடுக்கும் வகையில் மக்கள் வங்கியின் முக்கிய பிரமுகர்கள் நேற்று கிளிநொச்சி மக்கள் வங்கிக்கு நேரில் சமுகம் கொடுத்து நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

நேற்று பகல் 10.30 மணிக்கு மக்கள் வங்கி திறைசேரிப்பொறுப்பாளர் என். வசந்தகுமார், வடக்கு வலய உதவிப்பொது முகாமையாளர் என். தயானந்தன், வன்னிப்பிரதேச முகாமையாளர் ரி.கே. ஆனந்தராஜா ஆகியோர் கலந்து வங்கிச்செயற்பாடுகளை கணனி மயமாக்குவது தொடர்பாக கலந்துரையாடியதுடன் அதற்குரிய உபகரணங்களையும் கையளித்துள்ளதாக கிளிநொச்சி மக்கள் வங்கி முகாமையாளர் த.ஸ்ரீகௌரிபாலா தெரிவித்துள்ளார். (சோ, கு)

## மோட்டார் ஊர்திகளுக்கான வரியட்டை வழங்கல்

மோட்டார் ஊர்திகளுக்கான 2006 ஆம் ஆண்டுக்கான வரியட்டை அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் வழங்கப்படவுள்ளது.அந்தப்பகுதி பிரதேச செயல கங்களிலேயே தமது ஊர்திகளுக் குரிய வரியட்டையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் 2006ஆம் ஆண்டு வரியட்டையினைப்பெறவரும் ஊர்தி உரிமையாளர்கள் ஊர்தி உரிமை யாளர்களுக்கான தமிழீழ பதிவுப் புத்தகம், முன்னர் பெற்ற (2005) வரியட்டை, வீதியில் பாவனைக் குட்படுத்தப்படாத ஊர்திகளாயின் அவைபதிவு செய்யப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு என்பனவற்றுடன் தத்தமது புதிய குடும்பப் பதிவு அட்டை யையும் தம்முடன் எடுத்து வருமாறு போக்குவரத்துக் கண்காணிப் புப்பிரிவினர் வேண்டியுள்ளனர்.



புதுக்குடியிருப்பு குழந்தையேசு ஆலய வீதியில் கடும் மழை காரணமாக உழவு இயந்திரம் ஒன்று வீதியை விட்டு விலகி நீர் வழிந்தோட வெட்டப்பட்ட வாய்க்கால்களில் வீழ்ந்துள்ளதைப் படத்தில் காணலாம். ( படப்பிடிப்பு -க.தவரட்ணம்)

## மூக்குக்கண்ணாடி வழங்கல்

(ஒட்டுசுட்டான்)

நயினா மடுபிரதேச மக்களுக்கு கண்பரிசோதனை செய்யப்பட்டு மூக்குக்கண்ணாடி, வழங் கப்பட்டுள்ளது. நயினாமடு தியாக தீபம் திலீபன் மருத்துவமனையின் ஒழுங்கு படுத்தலில் நேற்று வெளிநாட்டில் இருந்து வந்த மருத்துவர்கள் கண் பரிசோதனைகளை மேற் கொண்டு 175 பேருக்கு கண்ணாடி வழங்கியுள்ளனர். (05)

## புது.நகர்ப்பகுதியில் பொது மலசலகூடம் இல்லை

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் பொது மலசல கூடம் இல்லாமையால் மக்கள் பெரும் அவலங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதனால் கலாச்சார சீரழிவுகள் ஏற்படும் நிலை உருவாகி வருகின்றது.

நீண்ட காலமாக இப்பகுதியில் மலசல கூடம் இல்லை. இவ்விடயம் குறித்து வணிகர் கழகத்தின் முக்கிய கூட்டங்களில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெரியப்படுத்தியும் கூட எந்த விதமான பயனும் கிடைக்கவில்லை. இதனால் வணிகர்கள் விசனமடைந்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு நகர அபிவிருத்திக்கு ஏற்றவாறு வணிக நிலையங்கள் பின் நோக்கி நகர்த்தப்பட்டு வரும் இவ்வேளையில் கூட மலசல கூடம் தொடர்பாக யாரும் கவனம் எடுக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது (08)

## மன்னாரில் மின்சாரம் தாக்கி இரண்டு பெண்கள் உயிரிழப்பு

(மன்னார்)

மன்னாரில் மின்சாரம் தாக்கி இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

மன்னாரைச்சேர்ந்த சகிலா (வயது-22), மஜிதா (வயது-17) ஆகிய இருவருமே பலியானவர்களாவர்.

மழை காரணமாக சரிந்த நிலையில் இருந்த தொலைக்காட்சி அன்ரனாவை சரிசெய்ய முற்பட்ட போது அன்ரனா பிரதான மின்சாரக் கம்பியுடன் முட்டியதால் இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

மன்னார் பொது வைத்திய சாலைக்கு சடலங்கள் எடுத்துச் செல்லப்பட்டு மரண விசாரணையின்பின் பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்டன. (18)

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

### மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

**வலுவூட்டல் பயிற்சி நிலையக் கட்டடம் அமைப்பதற்கான கேள்விகோரல்**

யாழ். மாவட்டத்திற்கான வலுவூட்டல் பயிற்சி நிலையக் கட்டடம் ஒன்று துரையப்பா விளையாட்டரங்கில் நிர்மாணிக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடையாமல் உள்ளது. இதன் குறைவேலைகளை நிர்மாணிப்பதற்குத்தகுதிவாய்ந்த (ICTAD-M9) ஒப்பந்தக்காரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்படிவத்தினையும், வேலைகள் பற்றிய விபரத்தினையும் மாவட்டச் செயலகக்களஞ்சிய நலன்புரிக்கிளையில் அலுவலக நாட்களில் மு.ப.10 மணியிலிருந்து பி.ப.4 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புத்தொகை ரூபா 1000,00 த்துடன் மீளளிக்கக் கூடிய வைப்புத் தொகையாக ரூபா 15000.00 ம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பப்படிவத்தினை தபாலுறையில் "சீல்" முத்திரையிட்டு, அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலரும் மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம என முகவரியிட்டு, தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "வலுவூட்டல் பயிற்சி நிலையக் கட்டடம் பூர்த்தி செய்வதற்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு 07.11.2005 ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு முன்னர் மாவட்டச் செயலக பிரதம கணக்காளரின் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். அன்றையதினம் பி.ப.3.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.

**க.கணேஷ்**
அரசாங்க அதிபரும்,
மாவட்ட செயலரும்,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். (சி.13117)

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச சபையின் சக ஊழியரான செல்வி அ.விஜிதா அவர்களின் சகோதரன்

### திரு. அ.ரகுநாதன்

திருகோணமலையில் கடந்த 23.10.2005அன்று அகால மரணமடைந்த செய்தியறிந்து மிகவும் துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**விசேட ஆணையாளர்,**
**உத்தியோகத்தர்கள், சக ஊழியர்கள்,**
(சி-13120) **பிரதேசசபை துணுக்காய்.**

## 10ஆம் ஆண்டு நினைவு நாள்

பிறப்பு 20 - 04 - 1967



வீரச்சாவு 26 - 10 - 1995

### லெப்டினன்ட் - நீலவர்ணன்

**(ஐயம்பிள்ளை மனோகரன்)**

தாயக மீட்பில் உன்னைப் பிரிந்து
பத்து ஆண்டுகள் ஓடிவிட்டன
ஆனாலும் உன் நினைவுகள் - என்றும்
எம்மை விட்டுப் பிரியப் போவதில்லை.

ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி. (6888)

உன்பிரிவால் வாடும்
**குடும்பத்தினர்.**


ஒக்ரோபர் வாசிப்பு மாதம்

*ஆசிரியருக்குரிய அந்தஸ்து இழக்கப்படுகின்றதா?*

வாசியுங்கள்

ஆசிரியர்களுக்கான மாத இதழ்

**அகவிழி**

ஆசிரியத்துவ நோக்கு

வருடாந்தச்சந்தா ரூ.300 மட்டுமே

தொடர்புகளுக்கு

AHAVILI,3,Torrlngton Vvenue,colombo-7,Srilanka,
TEL:011-2506272 E-MAIL:ahavili @ Viluthu.org

# புளோரிடாவை "வில்மா" சூறாவளி தாக்கியது
# ஆயிரக்கணக்கான வீடுகள் சேதம்;பலர் பலி

**(வோஷிங்டன்)**

***அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தை 200 கிலோ மீற்றர் வேகத்தில் வில்மா சூறாவளி நேற்றுத் தாக்கியுள்ளது. இதனால் ஆயிரக் கணக்கான வீடுகள் சின்னா பின்னமாகின. பலர் பலியாகியுள்ளனர். மியாமின் சர்வதேச விமானநிலையம் சேதமடைந்தது. புளோரிடா மாநிலத்தை அமெரிக்க சனாதிபதி புஷ் பேரழிவுப்பகுதியாக அறிவித்துள்ளார்.***

அமெரிக்காவைக் கடந்த சில நாட்களாகவே பல்வேறு புயல்கள் தாக்கிவருகின்றன. கற்றினா புயல்,றீற்றா புயல் என்பன புளோரிடா லுசியானா, மிசிசிப்பி, அலபாமா ஆகிய மாகாணங்களைத் தாக்கின. நியூ ஓர்லியன்ஸ் பகுதியில் 10000 இற்கும் மேற்பட்டவர்கள் இந்தப் புயலில் பலியானார்கள்.

இந்தப் பாதிப்பில் இருந்து அமெரிக்க மக்கள் முழுமையாக மீள்வதற்குள் கரிபியன்கடற்பகுதியில் வில்மா என்ற இன்னொரு புயல் உருவானது.

இந்தப் புயல் கியூபா,ஹைக்கி, மெக்சிக்கோ நாடுகளைத்தாக்கி விட்டு அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தைத் தாக்கியது.

வில்மா புயல் 200 கி.மீ வேகத்தில் புளோரிடா மாநிலத்தைத் தாக்கியது. கடற்கரைப் பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான வீடுகள் புயலில் சிக்கி சின்னா பின்னமாகிவிட்டன. எட்டு மணி நேரத்துக்கு மேலாக சுழன்று அடித்த காற்றில் வாகனங்களும் தூக்கி வீசப்பட்டன. கடலில் இராட்சத அலைகள் எழுந்து ஏராளமான நகரங்களில் கடல்நீர் புகுந்தது.

சுற்றுலாப் பயணிகளின் மையமாக இருந்த புளோரிடா மாநிலத்தில் பல பகுதிகள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது.

புளோரிடா மாநிலத்தின் மையப்பகுதியில் உள்ள "நாசா" விண்வெளி மையத்தில் இருந்த 15 ஆயிரம் ஊழியர்கள், விஞ்ஞானிகள் பாதுகாப்பான இடத்துக்கு வெளியேறி விட்டனர்.

இந்த நிலையில் அட்லாண்டிக் கடலில் அல்பா என்ற புயல் உருவாகியுள்ளது. இந்தப் புயல் டொமினிக்கன் குடியரசைத் தாக்கியது. அடுத்து இது அமெரிக்காவை நோக்கி நகர்ந்து வருகிறது.



புளோரிடாவில் வில்மா சூறாவளிக்குப் பயந்து பாதுகாப்பான இடத்திற்கு மக்கள் ஓடும் காட்சி.



மெச்சிக்கோவை தாக்கிய வில்மா சூறாவளியால் கான்கன் நகரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விமானம் தலைகீழாக புரட்டிப்போடப்பட்டுள்ளது.

# ஈராக்கில் 1996 அமெரிக்கப்படையினர் பலி;
# அமெரிக்காவில் போர் எதிர்ப்பாளர் போராட முஸ்தீபு

(வோஷிங்டன்)

ஈராக்கில் நடந்துவரும் போரில் பலியான அமெரிக்கப்படையினரின் எண்ணிக்கை இரண்டாயிரத்தை எட்டியுள்ளது. இதனால் அமெரிக்காவில் உள்ள போர் எதிர்ப்பாளர்களின் போராட்டம் தீவிரமடையவுள்ளது.

ஈராக் மீது 2003ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமெரிக்க இராணுவம் தாக்குதலைத் தொடங்கியது. அது முதல் நேற்று முன்தினம் வரை ஆயிரத்து 996 அமெரிக்க இராணுவத்தினர் பலியானார்கள்.

இந்த அளவுக்கு சாவு எண்ணிக்கை உயர்ந்து இருப்பது அமெரிக்காவில் உள்ள போர் எதிர்ப்பாளர்கள் மத்தியில் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் போர் எதிர்ப்புப் போராட்டம் தீவிரமடைய இருக்கிறது.

போரில் மகனை இழந்த சிண்டி ஷீகான் என்ற பெண் பலியானவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்தைக் கடந்ததும் வோஷிங்டன் நகருக்குச்சென்று வெள்ளை மாளிகை முன்பு அந்த மாளிகையின் வேலிக்கம்பியோடு தன் உடலை இணைத்து கட்டிக் கொண்டு அங்கேயே இருப்பேன். இராணுவம் நாடுதிரும்பும் வரை நான் அங்கிருந்து நகரமாட்டேன் என்று கூறினார்.

என்னைக் கைது செய்தால் மீண்டும் திரும்பி வந்து போராடுவேன் என்றும் அவர் கூறினார்.

# பாக்தாத்தில் தற்கொலைத் தாக்குதல்;
# 15 பேர் பலி; 11பேர் படுகாயம்

(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் தற்கொலைப் படையினர் நடத்திய கார்க்குண்டுத்தாக்குதலில் 15 பேர் பலியாகினர். 11 பேர் காயமடைந்தனர். பாக்தாத்தில் உள்ள பலஸ்தீன்ஷெரட்டன் விடுதியில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் தங்கியிருந்தபோது நேற்று முன்தினம் இரண்டு தற்கொலைப் படைத்தீவிரவாதிகள் காரில் குண்டுகளுடன் வந்து விடுதியில் மோதி காரை வெடிக்கச் செய்தனர். மூன்றாவது நபர் வீதியில் உள்ள ஓடு தளத்தில் குண்டை வெடிக்கச்செய்தார். இந்தக் குண்டு வெடிப்பில் விடுதி பலத்த சேதமடைந்தது. விடுதியின் கதவு மற்றும் ஜன்னல்கள் வெடித்துச் சிதறின. குண்டுவெடித்த இடத்திலிருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்திற்குப் புகை மண்டலமாகக் காட்சியளித்தது.



## மொராக்கோ தூதரக ஊழியர்கள் மாயம்

ஈராக்கின் பாக்தாத்திலுள்ள மொராக்கோ தூதரகத்திலிருந்து இரண்டு ஊழியர்கள் காணாமல் போயுள்ளனர். அவர்களை மீட்டுத்தருமாறு மொராக்கோ அரசு ஈராக்கைக் கேட்டுள்ளது.

# கூட்டுறவுச்சங்கத் தேர்தலில் 102 வயது மூதாட்டி வெற்றி

ஆந்திராவில் உள்ள காங்கிபாடு கூட்டுறவுச்சங்கத் தேர்தலில் 102 வயது மூதாட்டி வெற்றிபெற்று சாதனை படைத்துள்ளார். ஆந்திராவில் உள்ள காங்கிபாடு கூட்டுறவுச் சங்கத்திற்கு சமீபத்தில் தேர்தல் நடந்தது. இந்தத்தேர்தலில் வேமு சரஸ்வதம்மா என்ற 102 வயது மூதாட்டி போட்டியிட்டார். கூட்டுறவுச்சங்கத் தேர்தலில் மொத்தம் உள்ள 20 வாக்குகளில் 19 வாக்குகள் பதிவாகின. அதில் வேமு சரஸ்வதம்மா பத்து வாக்குகளைப் பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்டவர் ஒன்பது வாக்குகளைப் பெற்றார்.

வேமு சரஸ்வதம்மா ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். தனது 75 வயது மகனுடன் ரிக்ஷாவில் வந்து வேமு சரஸ்வதம்மா தேர்தல் அதிகாரிடம் வெற்றி பெற்றதற்கான சான்றிதழைப் பெற்றுக் கொண்டார். 102 வயது மூதாட்டி ஒருவர் கூட்டுறவுச்சங்கத் தேர்தலில் வெற்றிபெற்றது இதுவே முதல்முறையாகும்.



வெள்ளப்பெருக்கின் காரணமாக பெங்களூரிலிருந்து சென்ற கன்னியாகுமரி புகையிரதம் பாலமொன்றில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

# அமெரிக்காவின் சிறைகளில் 23 இலட்சம் கைதிகள்

(வோஷிங்டன்)

அமெரிக்கச் சிறைகளில் 23 இலட்சம் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. உலகிலேயே அமெரிக்க சிறைகளிலேயே அதிகளவு கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

2004ஆம் ஆண்டில் சிறைக்கைதிகளின் எண்ணிக்கை மேலும் 1.9 சதவீதம் அதிகரித்துள்ளது. அமெரிக்க மாகாணங்களில் உள்ள சிறைகளில் அவற்றின் கொள்ளளவைவிட 40 சதவீதம் கூடுதலாகக் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து அமெரிக்க நீதித்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில; மாகாணம் மற்றும் உள்ளூர் சிறைகள் உட்பட அமெரிக்காவில் உள்ள சிறைகளில் கடந்த ஆண்டு இறுதியில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 23 இலட்சம் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். அமெரிக்காவில் கைதிகள் எண்ணிக்கை கடந்த பத்து ஆண்டுகளில் சராசரியாக 3.2 சதவீதம் என்ற அளவில் அதிகரித்துள்ளது. இருப்பினும் கடந்த ஆண்டு 1.9 சதவீதமே உயர்ந்துள்ளது.

ஏனைய நாடுகளை விட அமெரிக்காவில் தான் அதிகமான பேர் சிறைகளில் உள்ளனர் என்று லண்டனில் உள்ள கிங்ஸ் கல்லூரி மேற்கொண்ட ஆய்வின் போது தெரியவந்துள்ளது. உலகளவில் சிறைக் கைதிகளின் எண்ணிக்கையில் சீனா இரண்டாவது இடத்தில் உள்ளது. சீனாவில் சிறைக்கைதிகளின் எண்ணிக்கை 14 இலட்சம் சீனாவின் மக்கள் தொகை 130 கோடி. ஆனால் அமெரிக்காவின் மக்கள் தொகை 29.6 கோடி மட்டுமே. இருந்தாலும் அமெரிக்காவில் சிறைக் கைதிகளின் எண்ணிக்கை மிக அதிகபட்சமாக உள்ளது.

கடந்த ஆண்டு ஒரு இலட்சம். மக்களில் 486 பேர் சிறைக்கைதிகள் என்ற நிலை இருந்தது. பத்து ஆண்டுகளுக்கு முன் ஒரு இலட்சம் மக்களுக்கு 411 பேர் என்ற அளவில் சிறைக்கைதிகள் இருந்தனர். பத்து ஆண்டுகளில் 18 சதவீதமாக உயர்வு அடைந்துள்ளது என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



லெபானின் முன்னாள் பிரதமரைக் கொலை செய்ததாக சிரியாமீது ஐ.நா குற்றம் சுமத்தியதைக் கண்டித்து டமஸ்கஷில் ஆர்ப்பாட்டம் செய்யும் சிரியா நாட்டவர்கள்.

# லெப்.கேணல் நாவரசன் பயிற்சிப் பாசறையின் துணைப்படை மற்றொரு அணி பயிற்சி நிறைவு

(மன்னார்)

**நாச்சிக்குடாவில் தமிழீழ கடற்படையின் லெப்.கேணல் நாவரசன் பயிற்சிப் பாசறையில் மற்றொரு துணைப் படை அணியின் பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.**

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ கடற்படையின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூரணி ஏற்றினார்.தமிழீழ தேசியக் கொடியை மன்னார் மாவட்ட கடற்படையின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழன் ஏற்றினார். நாவரசனின் திருவுருவப் படத்திற்கு மாவீரர் மணிமாறனின் தந்தையார் அகஸ்திப்பிள்ளை மரியநாயகம் ஈகச்சுடர் ஏற்ற, கிளிமுத்துமாரி அம்பாள் ஆலய பூசகர் மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து அகவணக்கமும் உறுதியுரையும் இடம்பெற்றது. தலைமையுரையைத் தொடர்ந்து அரசியல் துறை மகளிர் பொறுப்பாளா தமிழினி உரைநிகழ்த்தினர். சிறப்புரையை லெப்கேணல் ராஜன் கல்விப்பிரிவு பொறுப்பாளர் கீதன் ஆற்றி னார். அதனைத் தொடர்ந்து பயிற்சிகள், போட்டிகளில் தேர்ச்சி, வெற்றி பெற்றவர்களுக்கு தமிழீழ கடற் படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை பரிசில் வழங்கிக் கௌரவித்து தொடர்ந்து கருத்துரையை வழங்கினார். துணைப்படை வீரர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந் நிகழ்வில் தமிழீழ கடற்படையின் தளபதிகள், துறைசார், போராளிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா

(முல்லைத்தீவு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிலாவத்தை தெற்கு தியோகு நகர் கிராம மக்களுக்கான நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் விழா கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4.00மணிக்கு தியோகு நகரில் நடை பெற்றது.

மக்கள் தேவசபையின் நிதியுத வியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தினால் இந்த வீடுகள் அமைப்பதற் கான அடிக்கல் நாட்டும் விழா முல்லை மக்கள் நலன்புரிச் சங்க இணைப்பாளர் பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

# திருமலையில் புத்தர் சிலையை படமெடுத்த இரு வெளி நாட்டவர் மீது படையினர் தாக்குதல்

(திருமலை)

திருகோணமலையில் நேற்று முன்தினம் வெளிநாட்டவர் இருவர் படையினரால் தாக்கப்பட்டுள்ளனர். நகரின் முக்கிய சர்ச்சைக்குரிய புத்தர் சிலையையும் அதற்கு பாதுகாப்பு வழங்கிய படையினரையும், நிழல் படம் எடுத்த போதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இவர்கள் தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வில் பங்கேற்றோரையும் கடந்த சனிக்கிழமையன்று படம் எடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது. தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் நிலையை கட்டுக்குள் கொண்டு வந்த பொலிசார் குறித்த வெளி நாட்டவர்களை பாதுகாப்பாக அனுப்பி வைத்தனர். (32)

# கணவனை இழந்த பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் அன்பளிப்பு




(அலுவலக செய்தியாளர்)

கணவனை இழந்த பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வு அபி விருத்தி நிறுவனமும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து கிளிநொச்சி கணேசபுரம், கிருஸ்ணபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கணவனை இழந்த இரு பெண்களுக்கு தையல் இயங்திரங்களை அன்பளிப்புச் செய் துள்ளன. இந் நிகழ்வு நேற்று முற்பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தையல் இயந்திரங்களை தமிழீழ மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பக நிர்வாகப் பொறுப்பாளர் முத்தன் பயனா ளிகளுக்கு வழங்கினார். இந் நிகழ்வில் கிளி நொச்சி அகதிகள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்ட இணைப்பாளர் இராஜன் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை நேற்று விவேகானந்த நகரில் 93 பேருக்கு எப்.எ.ஒ நிறுவனத்தினர் வீட்டுத் தோட்ட விவசாய உள்ளீடுகளையும், விதை தானியங்களையும் வழங்கினார். பிற்பகல் 3.00 மணிக்கு விவேகானந்த நகர் கல்கி முன் பள்ளியில் வைத்தே இவ் விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டன. (ச)

# சுனாமி அனர்த்தத்தினால் அழிவுற்ற பயன் தரு பயிர்களை மீண்டும் உற்பத்தி செய்யும் முகமாக மரநடுகை நிகழ்வு

(முல்லைத்தீவு)

சுனாமி அனர்த்தத்தினால் அழிவுற்ற பயன் தரு மரங்கள் மீண்டும் உற்பத்தி செய்யும் நோக்கோடு பயன்தரு மர நடுகை நிகழ்வு முள்ளி வாய்க்கால் மேற்குக் கிராமத்தில் கடற்கரையில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

வேள்ட்விஷன் நிறுவனத்தின் நிதியு தவியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இந்த மர நடுகை திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரினை வேள்ட் விஷன் நிறுவன முல்லை மாவட்ட இணைப்பாளர் ஐங்கரன் ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ தேசியத் தொலைக்காட்சி சேவை முல்லை மாவட்ட பொறுப்பாளர் செல்வி அருணா ஏற்றினார். மங்கல விளக்கினை முல்லை மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் கோகிலதாசன், முள்ளி வாய்க்கால் கமக்கார அமைப்பு தலைவர் வே.திசை வீரசிங்கம் கிராம அலுவலர் மு.தியாகராசா ஆகியோர் ஏற்றினார்கள் தொடர்ந்து கருத்துரைகளை வேள்ட்விசன் நிறுவன மாவட்ட இணைப்பாளர் ஐங்கரன் முல்லை மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் கோகிலதாசன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் சின்னண்ணை ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

தொடர்ந்து வருகை தந்த பிரமுகர்களும் மக்களும் இணைந்து மரநடுகையில் ஈடுபட்ட னர். இதில் இரண்டு ஏக்கரில் சுமார் இரண்டாயி ரத்து 250 தென்னை மரக் கன்றுகளும் 42 சவுக்குக் கன்றுகளும், 2250 மரமுந்திரிகை களும், 20 ஆயிரம் பனை விதைகளும் நாட்டப் பட்டன. இத் திட்டத்திற்காக சுமார் 26 இலட்சம் ரூபா செலவு செய்ததாகவும், வேள்ட்விஷன் நிறுவன மாவட்ட இணைப்பாளர் ஐங்கரன் தெரிவித்தார். (20)

# உழவனூரில் வீடு தீப்பிடித்து எரிந்தது ரொக்கப்பணம், பொருட்கள் நாசம்

(கண்டாவளை)

சுண்டிக்குளம் வீதி உழவனூர் தம்பிராசபுரம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குடிசை ஒன்று தீப்பிடித்து முற்றாக எரிந்து நாசமா கியுள்ளது.

செ.தவராசா என்பவரது வீடே எரிந்து நாசமாகியது. சம்பவதினம் வேலை க்கு கணவர் சென்று விட்டதாகவும் தான் மூன்று பிள்ளைகளுடன் இருந்து சமைத்துவிட்டு அருகில் ஆடு கட்டசென்ற சமயம் தனது பிள்ளை கள் நெருப்பை எடுத்துவிளையாடியதன் காரணமாக வீட்டில் தீப்பிடித் திருக்கவேண்டுமெனவும் திருமதி தவராசா தெரிவித்தார். தான்வரும் போது வீட்டின் பெரும்பகுதி தீப்பற்றிவிட்டதாகவும் தான் உடனே உறக்கத்திலிருந்த ஒன்றரை ரவயதுப் பிள்ளையை காப்பாற்ற வரும் போது தனது ஐந்துவயது, ஏழு வயதுப் பிள்ளைகள் உறக்கத்திலிருந்த பிள்ளையை இழுத்துக் கொண்டு வெளியே வந்ததார்கள்.எனவும் அவர்கள் காயமேதும் இல்லாமல் தப்பி விட்டதாகவும் தெரிவித்தார். வீட்டில் இருந்த பாவனைப்பொருட்கள், மற்றும் 3500 ரூபா ரொக்கப்பணமும் எரிந்து நாசமாகியுள்ளதாக அவர் கூறினார்.(14)

# தலைமன்னார் ஊடாக போதைப் பொருள் கடத்தல் நாளுக்கு நாள் அதிகரிப்பு

தலைமன்னார் கடற்பரப்பின் ஊடாக போதைப் பொருட்கள் கடத் தப்படுவது நாளுக்கு நாள் அதி கரித்து வருவதாக சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒருமாதகாலத்துள் 11 கிலோகிராம் ஹெரோயின் போதைப் பொருட்கள் இந்தப் பகுதியூடாக நாட்டுக்குள் கடத்திவரப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மீன்பிடியில் ஈடுபடுவது போன்ற போர்வையில் சிலர் இந்தப் போதைப் பொருள் வர்த்தகத்தை மேற்கொண்டு வருவதாக தலைமன்னார் பொலிசார் தெரிவித்தனர்.

இந்தியாவின் தூத்துக்குடி துறை முகத்தில் இருந்து போதைப் பொருட்கள் கடத்தி வரப்படுவது குறித்து தகவல்கள் கிடைத்துள்ள தாகப் பொலிசார் தெரிவிக்கின் றனர்.போதைப் பொருட்கள் இலங்கைக்குள் கடத்தி வரப்படு வதை தடுப்பதற்காக மன்னார் கடற் பரப்பில் கண்காணிப்பை தீவிரப்படுத் தியுள்ளதாக கரையோர பாதுகாப்புப் பொலிசார் கூறினர். (32)



கரடிப் போக்குச் சந்தியில் நேற்று முன்தினம் மாடு ஒன்று வீதியைக் கடக்க முற்பட்ட போது எதிரே வந்த வாகனம் மோதியதில் இறந்து கிடப்பதையும், அதனை நாய் ஒன்று கடிப்பதை யும் படத்தில் காணலாம்.
(படம்:- பிரதீபன்)

# இருதய சிகிச்சைக்கு உதவுக

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த அருந்த வராசா என்பவரின் மகள் சோபிகா (மூன்று மாதம்) இருதய சத்திரசிகிச்சைக் குட்படுத்த வேண்டிய நிலையில் உள்ளார்.

இருதய் சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கு ஐந்து இலட்சம் ரூபா தேவைப்படுகின்றது.

இதற்கென இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினர் ரூபா ஐம்பதினாயிரம் வழங் கியுள்ளனர்.

மேற்படி சத்திர சிகிச்சைக்கான உதவு தொகையினை கருணை உள்ளம் கொண்ட வர்களிடம் இருந்து பிள்ளையின் தந்தை எதிர்பார்த்துள்ளார். உதவி நல்கிட முன் வருபவர்கள் கணக்கு இலக்கம் 30027 இலங்கை வங்கி கிளிநொச்சிக்கிளைக்கு அனுப்பிவைக்கும் வண்ணம் வேண்டுகை விடுத்துள்ளார். (சோ)

# மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் கிளி.மாவட்டக் கிளை அலுவலக திறப்பு விழா



(அலுவலக செய்தியாளர்)

மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப் பின் கிளிநொச்சி மாவட்டக் கிளை அலுவலகத் திறப்பு விழா நேற்று முன்தினம் நண்பகல் 12.00 மணிக்கு கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் நடை பெற்றது.

மேற்படி கூட்டமைப்பின் கிளி. மாவட்ட இணைப்பாளர் தி.சௌசாங்கன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் நிறுவனக் கிளையினை கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் இ.கணேசபிள்ளை கலந்து கொண்டு நாடா வினை வெட்டித்திறந்து வைத்தார்.

மேற்படி நிகழ்வில் கருத்துரைகளை நிறுவன மாவட்டங்களின் இணைப்பாளர் சன்னாதலிஸ் கிளி.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய நிர்வாக உத்தி யோகஸ்தர் சி.சுப்பிரமணியம் ஆகியோர் வழங் கினர். (சோ)

# யாழ்.வைத்தியசாலை இரத்த வங்கியை தேசிய தர இரத்த வங்கியாக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியை தேசிய தரத்திலான இரத்த வங்கியாக தரமுயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தேசிய குருதி மாற்று பிரயோக சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம்.பிந்துசாரா உறுதியளித்துள்ளார்.**

யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவுகின்ற பற்றாக்குறைகள் மற்றும் குறைபாடுகள் என்பவற்றை நேரில் சென்று பார்வையிட்ட பின்னரே அவர் இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் தற்போது நிலவுகின்ற தொழில் நுட்ப வசதியீனங்கள், ஆளணிப்பற்றாக்குறைகள், இட வசதி இன்மை என்பவற்றைப் போக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர்கூறினார்.

நாளாந்தம் பல்லாயிரக்கணக்கானோர் சிகிச்சை பெறவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் இரத்த வங்கியின் சேவைகள் விஸ்தரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தே இதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்றும் அவர் கூறினார். (33)

# தென்மராட்சி கல்வி வலயத்தில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை

(தென்மராட்சி)

யாழ். தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாதுள்ளதாக தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகள் கூறுகின்றனர்.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நிலவி வரும் இவ் வெற்றிடங்களால் இங்குள்ள பாடசாலை மாணவர்களின் ஆங்கில கல்விச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள்ளன.

இவ்வாறு நிலவி வரும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள் குறித்தும் இதனால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் குறித்தும் உயர் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் அவர்கள் இதற்கு உரிய நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை என்றும் வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மாகாண கல்வித் திணைக்களம் எடுக்க வேண்டும் என்றும் அவ்ர்கள் கோரியுள்ளனர். (33)

# முச்சக்கரவண்டி—மினிபஸ் விபத்து; ஒருவர் பலி; மூவர் படுகாயம்

நாவற்குழிப்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முச்சக்கரவண்டி-மினிபஸ் விபத்தில் சிக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தவர் தென்மராட்சி மந்துவில் பகுதியைச் சேர்ந்தவரான இராமலிங்கம் சதீஷ் (வயது-29) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை மினிபஸ் சாரதியை சாவகச்சேரி பொலிசார் கைது செய்துள்ளனர். படுகாயமடைந்த மூவரும் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்குஅனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முச்சக்கர வண்டியில் பயணித்தவர்களே படுகாயமடைந்தும் உயிரிழந்தும் உள்ளனர். மினிபஸ்பயணிகள் எவரும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கவில்லை. (27,41,28)

# சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நடாத்தும் மாவீரர் தினத்தையொட்டிய கவிதைப்போட்டி

மாவீரர் தினத்தையொட்டி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கவிதைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

தேச விடுதலையை மையமாகக் கொண்டு படைப்புக்கள் ஆக்கப்பட வேண்டும். 30 வரிகளுக்குக் குறையாமலும் 40 வரிகளுக்கு மேற்படாமலும் படைப்புக்கள் அமைய வேண்டும் வயது வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது கவிதைகள் யாவும் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பப்படவேண்டும் வெற்றியீட்டும் படைப்புக்களுக்கு பெறுமதி வாய்ந்த சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

படைப்புக்கள் யாவும், கவிதைப் போட்டி -2005, தலைமைச்செயலகம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, பரமேஸ்வராச்சந்தி திருநெல்வேலி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

# காசநோய் வைத்திய சேவை பிரதேச வைத்தியசாலைகளுக்கு விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

காசநோய் வைத்திய சேவையை யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச வைத்தியசாலைகளுக்கும் விஸ்தரிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட காசநோய் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி வைத்தியகலாநிதி சி.ஜமுனானந்தா கூறினார்.

யாழ்.நகரில் இருந்து தூரப்பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்ற காசநோயாளர்கள் யாழ்நகரிலுள்ள காசநோய் வைத்திய சாலைக்கு வந்து சிகிச்சை பெற்றுச் செல்வதில் எதிர்கொள்கின்ற சிரமங்களைப் போக்குவதற்காகவே மேற்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

காசநோய்ச் சிகிச்சை சேவைகளைப் பன்முகப்படுத்தும் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி வைத்திய சாலை, சங்கானை வைத்தியசாலை, ஊர்காவல்துறை வைத்தியசாலை, பருத்தித்துறை வைத்தியசாலை, தெல்லிப்பழை வைத்தியசாலை என்பனவற்றுக்கு காசநோய் சோதனை மற்றும் சிகிச்சைகள் விரிவாக்கம்செய்யப்பட்டுள்ளன என்றும் கூறினார். (33)

# யாழ்.மாவட்ட வாக்குச் சீட்டுக்கள் நேற்று முன்தினம் வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வாக்காளர்கள் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கான வாக்குச்சீட்டுக்கள் நேற்று முன்தினம் பலத்த இராணுவ பொலிஸ் பாதுகாப்புகளுடன் யாழ்.குடாநாட்டுக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

விசேட விமானம் மூலம் பலாலி விமானப்படைத்தளத்தை வந்தடைந்த இவ்வாக்குச்சீட்டுக்கள் பலத்தபாதுகாப்புடன் எடுத்துவரப்பட்டு யாழ்ப்பாண தெரிவத்தாட்சி அதிகாரி கே.கணேஷிடம் பொறுப்ப ளிக்கப்பட்டன. இவ்வாறு எடுத்துவரப்பட்ட வாக்குச்சீட்டுப் பொதியில் ஏழு இலட்சத்து தொண்ணூறாயிரம் வாக்குச்சீட்டுக்கள் உள்ளன என தெரிவிக் கப்பட்டுள்ளது. இவ்வாக்குச்சீட்டுப் பொதிகள் வைக்கப்பட்டுள்ள யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் காரியாலயத்துக்கு பூரணபாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வலுவலகத்தைச் சூழ உள்ள பகுதிகள் பாதுகாப்பு வலயமாகவும் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. (33)

# மத்திய மலை நாட்டில் மண் சரிவு ஏற்படும் அபாயம்

## புவியியல் வல்லுனர்கள் எச்சரிக்கை

மத்திய மலைநாட்டின் 40 வீதமான பகுதிகளில் மண்சரிவு ஏற்படக் கூடிய அபாயநிலை காணப்படுவதாக புவியியல் வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் இந்த விடயம் குறித்து மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என பேராதனைப் பல்கலைக் கழகத்தின் புவியியற் துறைப் பேராசிரியர் கப்பில தகநாயக்க தெரிவித்துள்ளார். மண்சரிவுக் குள்ளான பகுதிகளே தொடர்ந்தும் மண்சரிவுக்குள்ளாகும் என அவர் தெரிவித்துள்ளார். இந்த இடங்களில் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னரே மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. அந்த இடங்களை இன்னும் அடையாளம் காணமுடியுமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.அவ்வாறான பிரதேசங்களில் வாழும் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இரத்தினபுரி எலபாத்த பகுதியில் மண்மேடொன்று சரிந்துள்ளது. தொடர்ந்து பெய்து வரும் மழைகாரணமாக இந்த மண் மேடு சரிந்திருக்கலாம் எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக மண்சரிவு ஏற்படக் கூடிய ஆபத்து இருப்பதால் மக்கள் கவனமாக இருக்கவேண்டும் என வழிமண்டலவியல் திணைக்களம் கேட்டுள்ளது. (32)

# கடற்றொழிலாளர் நலன் கருதி யாழில் வலைத்தொழிற்சாலை அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடற்றொழிலாளர்களின் நலனை கவனத்தில் கொண்டு யாழ்ப்பாணத்தில் வலைத்தொழிற்சாலை ஒன்று அமைக்கப் படவுள்ளது.

பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த ஹரித்தாஸ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் இந்த வலைத் தொழிற்சாலை நிறுவப்படவுள்ளது.

யாழ். குடாநாட்டில் உள்ள கடற்றொழிலாளர்கள் தரமான வலைகளைப் பெறமுடியாத நிலைமை உள்ளது. இதனால் இவர்கள் தொழில்ரீதியாக பின்னடைவுகளை எதிர்கொள்கின்றனர். அத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட வலைகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய சூழ்நிலை யாழ். குடாநாட்டு கடற்றொழிலாளர்களுக்குக் காணப்படுகின்றது.

எனவே இவற்றினால் கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் முகமாகவே இவ் வலைத்தொழிற்சாலை நிறுவப்படவுள்ளது. இது தொடர்பாக ஹரித்தாஸ் நிறுவன அதிகாரிகள் யாழ்.அரச அதிபர் கே. கணேஷ் மற்றும் அதிகாரிகளுடன். கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தியுள்ளனர். (33)

# சுகாதாரத்தை விருத்தி செய்ய ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள சகல மாவட்டங்களிலும், சுகாதாரத்தை விருத்தி செய்யும் நோக்கில் எட்டு மாவட்டங்களிலும், சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதிஒதுக்கீடு செய்துள்ளது. வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்துப் மாவட்டங்களிலும் சுகாதார சீர்கேடுகளையும், மந்த போசனை, எய்ட்ஸ் ஆகியவற்றை சீராகப் பேணுவதற்காக நீண்ட கால செயற்றிட்டமொன்றை மேற்கொள்ளுவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 30 கோடி ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டம் 2009 ஆம் ஆண்டு பூர்த்தியடைந்து விடும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# மாத்தளையில் கைது செய்யப்பட்ட தமிழர்கள் நவம்பர் 3வரை விளக்கமறியலில்

மாத்தளையில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட தமிழர்கள் எதிர்வரும் நவம்பர் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மாத்தளையில் மகிந்தராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரைக்கூட்டம் நடைபெறுவதையடுத்து சோதனை நடவடிக்கைகளை சிறிலங்காப் பொலிசார் மேற்கொண்டனர்.

அப்போது ஒருவீட்டிலிருந்த பெண் உட்பட மூன்று தமிழர்களும் வீட்டின் உரிமையாளரான இந்தியப்பெண்ணும் கைது செய்யப் பட்டனர். இவர்கள் அனைவரும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு மாத்தளை நீதிமன்றில் நீதிபதி குணசிங்கவிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அனைவரையும் எதிர்வரும் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க குணசிங்க உத்தரவிட்டார்.

# இளைஞர் கைது

மூதூர் கடற்படையின் அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் நுழைந்ததாக தமிழ் இளைஞர் ஒருவரை மூதூர் பொலிசாரிடம் ஒப்படைத்திருப்பதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

குச்சவெளிப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த புவனேந்திரன் எனப்படும் சுந்தரலிங்கம் சந்திரகுமார் என்பவரே கைது செய்யப்பட்டவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறைத்தண்டனை

குடாக்கடற்பரப்பினூடாக டைனமற் வெடிபொருட்களை கடத்த முற்பட்டதாக கூறி கைது செய்யப்பட்ட மீனவரொருவருக்கு யாழ். நீதிமன்று ஒருவருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட மூன்று வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்துள்ளது அத்துடன் ஆயிரம் ரூபா தண்டப் -பணம் செலுத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# தேர்தல்களால் பீகார் மக்கள் சலித்துப் போய் விட்டார்கள்?

பீகார் மாநிலம் மீண்டும் இரண்டாவது தடவையாக தேர்தல் கோலம் பூண்டிருக்கின்றது. வடமாநில சட்ட சபைத் தேர்தல் கடந்த சனவரி மாதம் பீகார் உட்பட ஜார்க்கண்ட், ஹரியானா மாநிலங்களில் நடைபெற்றது. பீகார் தவிர்ந்த மாநிலங்களில் எப்போதோ ஆட்சியமைந்து விட்டது. பீகார் தான் பரிதாபகரமாக தொங்கு பாராளுமன்றத்தை எதிர்நோக்கியது.


இந்த நிலையில் இரண்டாவது தடவையாக பீகார் நான்கு கட்டத் தேர்தலில் முதல் கட்டத்தை தாண்டியிருக்கின்றது. நிறைந்த வன்முறைகளுக்கு மத்தியில் தான் முதல் கட்டத்தேர்தல் நடைபெற்றுள்ளதாக தேர்தல் ஆணையகம் வருத்தம் வெளியிட்டிருக்கின்றது. 57 சட்ட சபைத் தொகுதிகளில் நடைபெற்ற தேர்தலில் 46 சவீதமான வாக்குப் பதிவே நடைபெற்றிருக்கின்றது என்பது கவனிக்கத்தக்கதொன்று.

ஏனெனில் 50 சதவீதமானோர் கூட வாக்களிக்கவில்லை என்பதே பேருண்மை. அத்துடன் மக்கள் அடிக்கடி தேர்த்ல் என்பதால் மிகுந்த அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் என்பது அடுத்த உண்மை.

அந்த வகையில் இரண்டாம் கட்டத் தேர்தலில் மக்கள் மனதில் மாற்றம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் அரசியல் கூட்டணிகள் மட்டும் முதல் முறை தேர்தலிலிருந்து மாற்றம் கண்டிருக்கின்றது என்றுதான் கூற வேண்டும்.

இம்முறை தேர்தலில் ராஷ்டிரிய ஜனதா தளம் (லல்லுபிரசாத் யாதேவ்) காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் (சரத்பவார்), மார்க்சிட் கம்யூனிஸ்ட் என்பன ஒரு கூட்டணி.

அடுத்து பாரதிய ஜனதாவும், ஐக்கிய ஜனதா தளம் (நிதிஷ்குமார்) என்பன



நிதிஷ்குமார்

இரண்டாவது கூட்டணியாகும். மூன்றாவதாக லோக் ஜனசக்தி (பஸ்வான்) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூட்டாக களம் இறங்கி இருக்கின்றன.

பிரதான இக்கூட்டணிகளை விடவும், சமாஜ்வாடி (முலாயம் சிங்யாதேவ்) பகுஜன சமாஜ்வாடி (மாயாவதி) என்பனவும், தனித்தனியாக தேர்தலில் போட்டியிடுகின்றன.

கடந்த முறை தேர்தல் நிலவரமே இம்முறையும் ஏற்படும் என்றே எதிர்பார்ப்பு நிலவுகிறது. ஏனெனில் இம்முறையும் வாக்குகள் சிதறும் நிலவரமே காணப்படுகின்றது. ஏனெனில் லல்லு பிரசாத் யாததேவ்விற்கு கிடைக்கக்கூடிய வாக்குகளில் பஸ்வானும், புகுந்து கொள்வதால் பீகார் தேர்தலில் வாக்குகள் சிதறும் நிலவரம் ஏற்பட்டிருக்கின்றது எனலாம். .

கடந்த சனவரியில் நடைபெற்ற தேர்தலில் வாக்குகள் நாலாபக்கமும், சிதறியே காணப்பட்டன. ஏனெனில் எல்லாக்கட்சிகளும், தனித்தனியாகவே தான் களம்இறங்கியிருந்தன.

கடந்த மக்களவைத் தேர்தலில் ராஷ்டிரிய ஜனதாதளம், காங்கிரஸ், தேசியவாதக் காங்கிரஸ், லோக் ஜனசக்தி என்பன ஒன்றாக கைகோர்த்தன. பெரும்பாலான இடங்களைக் கைப்பற்றின. மத்தியரசில் அங்கமும் வகித்தன. அந்த வகையில் தான் லல்லுபிரசாத் யாதேவ், ராம்விலாஸ் பஸ்வான் போன்றோர் பீகார் மாநில மத்தியமைச்சர்களாக கொலுவேறினார்கள்.

மத்தியரசில் அங்கம் வகிக்கத் தொடங்கியவுடனேயே லல்லுப் பிரசாத் யாதேவ், ராம்விலாஸ் பஸ்வானும் குடும்பிப் பிடிபிடிக்கத் தொடங்கி விட்டனர். தாம் இருவரும் கூட்டணியமைத்ததனால் தான் மத்தியரசில் இடம் பிடிக்க முடிந்தது என்பதை மறந்தனர். யார் பெரியவர்... யார் சிறியவர் எனப் பலப் பரீட்சையில் இறங்கினர் ஒருவர் குறைகளை மற்றவர் நிறுக்க முற்பட்டனர்.

இதனால் அடுத்து வந்த மாநிலத் தேர்தலில் கூட்டணி பிரிந்தது. லல்லு பிரசாத் யாதேவ் தேசிய காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் கூட்டணி என்றார்.

அதிக இடம் ஒதுக்குமாறு காங்கிரஸ் எந்த அடிப்படையில் கேட்க முடியும் என காங்கிரஸ் கட்சியுடனும் உறவை முறியடித்துக் கொண்டார். இதனால் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டது.

அதே போல் ராம்விலாஸ் பஸ்வானும், தனித்து களமிறங்கினார். யாருடனும் கூட்டணி இல்லை என்று முழங்கினார். பீகாரில் லல்லுபிரசாத் ஆட்சியை அகற்றியே தீருவது என்று சபதம் செய்தார்.


ஆனால் பெரும்பான்மை என்பதே யாருக்கும் கிடைக்கவில்லை. யாரும் யாருடனும் கூட்டணி சேர மாட்டோம் என்றதால் வாக்குகள் எல்லாக் கட்சிகளிடமும் சிதறிக் காணப்பட்டன.

இதேவேளை ராம்விலாஸ் பஸ்வான் 29 இடங்களை தனதாக்கிக் கொண்டதால் ஆட்சியமைப்பவர்கள் யார் என்பதை தீர்மானிப்பதில் பிரதான பங்கைப் பெற்றுக் கொண்டார். இதனால் பஸ்வான் கர்வம் கொண்டதாகவும், அதனாலேயே ஆட்சியமைக்க யாருக்கும் கை நீட்ட முன்வரவில்லையென்றும் அப்போது விமர்சிக்கப்பட்டார்.

இதனால் அவரது கட்சிக்குள்ளேயே அவருக்கு எதிர்ப்பு உருவானது. 29 உறுப்பினர்களில் 22 பேர் இவரது ஆட்சியமைக்கவுள்ளவர்களுக்கு உதவாத கொள்கைக்கு எதிராக திரண்டனர். ஐக்கிய ஜனதா தளத்துடன் இணைந்தனர். இதனையடுத்து பஸ்வான் ஏழு பேருடன் மட்டும் தனித்து விடப்பட்டார் எனலாம்.

அடுத்து 243 உறுப்பினர்களைக் கொண்ட பீகார் சட்ட சபையில் பெரும்பான்மை பெற்று ஆட்சியமைக்க குறைந்தது 122 உறுப்பினர்கள் இருக்க வேண்டும் ஐக்கிய ஜனதாதள நிதிஷ்குமார் தமக்கு 127 உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாக கடந்த மே மாதம் 23 ஆம் திகதி ஆட்சியமைக்க பீகார் ஆளுனர் பூட்டாசிங்கிடம் கோர இருந்தார்.

ஆனால் என்ன நடந்தது ஏது நடந்தது என்றே தெரியவராது பீகார் சட்ட சபை மத்தியரசால் கலைக்கப்பட்டு விட்டது. ஆனால்



லல்லு

எல்லாவற்றுக்கும் லல்லு பிரசாத் யாதேவ் பிரதான சூத்திரதாரி என்றே பின்னாளில் தெரியவந்தது. அந்த வகையில் பீகார் சட்ட சபையினை ஐக்கிய ஜனதா தளம் அமைத்து விடுமோ.. எனும் அச்சம் காரணமாக லல்லுபிரசாத். அவசர அவசரமாக தனது நண்பர் சரத்பவார் உதவியுடன் சட்ட சபையினைக் கலைப்பதற்கு அமைச்சரவையில் ஒப்புதல் பெற்றுக் கொண்டார். ஆளுனர் பூட்டாசிங்கும் மத்தியரசிடம் அனுமதியளிக்க சிபாரிசு செய்தார்.

இதனையடுத்து எதிர்க்கட்சிகளிடம் பீகார் மாநிலமும், ஜார்க்கண்ட் போல் போய் விடும் எனும் அச்சம் காரணமாக கூட மத்தியரசு பீகார் சட்ட சபையினைக் கலைத்து விட்டதாக விமர்சனம் எழுந்தது.



சோனியா

அத்துடன் லல்லுபிரசாத் யதேவ்வுடன் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி நெருக்கமானவர் என்பதும் யாதேவ் சோனியாவிடம் நன்மதிப்பில் இருப்பவர் என்பதாலும் கூட பீகார் சட்ட சபை கலைக்கப்பட்டதாகக் கூடப்பேசப்பட்டது.

எது எப்படியோ.. பீகார் சட்டசபை கலைக்கப்பட்டுவிட்டது. ஆனால் பீகார் மக்கள் அதனை விரும்பினார்களா என்பதே கேள்விக்குறிதான் எனலாம். ஏனெனில் மே 24 ஆம் திகதி பாரதிய ஜனதா கூட்டணி நடத்திய கதவடைப்புப் போராட்டத்திற்கு அதிக வரவேற்பு கிடைத்ததாகவும் பீகார் மக்கள் லல்லு பிரசாத் யாதேவின் ஆட்சியை புறக்கணிக்கத் தொடங்கிவிட்டதாகவும் ஐக்கிய ஜனதாதளத்தின் தலைமையில் புதிய ஆட்சியை விரும்பினார்கள் என்றும் அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதனை வைத்துப் பார்க்கும்போது இம்முறை தேர்தலிலும் யாரும் அதிக பெரும்பான்மை பெறமாட்டார்களா.... என்பதற்கு அப்பால் பீகாரில் ஆட்சி மாற்றத்தை மக்கள் விரும்புவதாக இருப்பின், நிச்சயம் ஐக்கிய ஜனதா தளத்தின் தலைமையில் ஆட்சியமைக்கக்கூடும்.......(?) என்று எதிர்பார்க்க முடியும்.

இதேவேளை இம்முறையும் ஆட்சியமைக்கப்போவது யாராக இருந்தாலும் அவர்களுக்கு ராம் விலாஸ் பஸ்வானின் உதவி தேவை என்பதாகவே தான் எதிர்பார்க்கப்படுகிறது. அப்படியெனில் கடந்த தேர்தல் போலவேதான் பஸ்வான் இம்முறையும் இடங்களை தக்கவைத்துக் கொள்வார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது என்றுதான் நம்பத்தோன்றுகின்றது.

இதேவேளை மத்தியரசு சட்ட சபையினை கலைத்தமை பிழையான தொன்று என்று உச்ச நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பு வழங்கி இருக்கின்றது. இந்தத் தீர்ப்பு தமக்கு கிடைத்த வெற்றியென பீகார் எதிர்க்கட்சிகள் மார்தட்டுகின்றன. அது மட்டுமன்றி ஜனநாயக படுகொலையில் மத்தியரசு ஈடுபடுகின்றது என்று பாரதிய ஜனதா போர்க் கொடி வேறு தூக்கியிருக்கின்றது.



சரத்பவார்

எனவே மத்தியரசும் இம்முறை பீகார் தேர்தலில் செல்வாக்குச் செலுத்தும் என்றும் நம்பலாம். அத்துடன் லல்லு பிரசாத் யாதேவின் தாளத்திற்கு மத்தியரசு ஆடுவதாக ஏற்கனவே விமர்சனம் எழுந்திருக்கின்றது.

அதுமட்டுமன்றி லல்லு-ராப்ரிதேவிக்கு எதிரான வருமான வரி தொடர்பான வழக்குகளை மத்தியரசு சத்தமில்லாமல் மூடியுள்ளமையும் அம்பலமாகி இருக்கின்றது. அதுவும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பதவியேற்று பத்து நாட்களுக்குள் இந்தச் சம்பவம் நடந்துள்ளமை மத்தியரசு மீதான நம்பகத்



பஸ்வான்

தன்மையினை போக்கடித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இத்தகைய சூழலில்தான் பீகார் சட்டசபைத் தேர்தலை எதிர்கொள்கின்றது. இந்த வகையில் பல விதமான கருத்துக் கணிப்புகள் எழுந்திருக்கின்றன. அந்த வகையில் 100 இடங்களை லல்லு பிரசாத் கூட்டணியும், 93 இடங்களை ஐக்கிய ஜனதா தள கூட்டணியும் 18 இடங்களை பஸ்வான் கூட்டணியும் பெறும்என்று ஜி.டி.வி. தொலைக்காட்சி கூறியிருக்கின்றது.

இதேவேளை ஸ்டார் தொலைக்காட்சியின் கணிப்பின்படி, ஐக்கிய ஜனதா தள கூட்டணி இறுதிப் பெரும்பான்மை கிடையாது விட்டாலும், அதிகப்படியான ஆசனங்களைக் கைப்பறறும் எனத்

**அ. கலைவாணி**

தெரிவிக்கின்றது.

ஆனாலும் கருத்துக் கணிப்புக்கள் பொய்யாகிப்போன சந்தர்ப்பங்களுமுண்டு. இத் தகைய நிலையில் நவம்பர் 22 ஆம் திகதிக்கு பின்னர்தான் பீகார் ஆட்சியார் கையில் என்பது தெரிய வரும் அது வரையில் பலவிதமான கணிப்புகளையும் ஆரூடங்களையும் பீகார் தேர்தல் சுமந்து கொண்டிருக்கும் என்பதே உண்மை நிலவரமாகும்.





**17.10.2005**
**23.10.2005**

**17**

□ புத்தளம் மன்னார் வீதியில் உந்துருளியில் வந்தவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிறிலங்காப் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மரணம்.

**18**

□ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் சிந்தனைகள் என்ற தலைப்பில் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டார்.



□ மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பகுதியில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிறிலங்காப் பொலிசார்மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் பலி, ஒருவர் காயம்.

□ தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு லண்டன் சென்றிருந்த சனாதிபதி சந்திரிகா நாடுதிரும்பினார்.

□ யாழ்ப்பாணத்தில் இரண்டு பாடசாலை அதிபர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலையில் பாடசாலை மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டன.

□ சிறிலங்கா அரசு அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடித்தது.

**19**

□ வவுனியா நகரிலிருந்து 30 கிலோமீற்றர் தொலைவில் கனகராயன் குளத்துக்கு கிழக்காக உள்ள விஞ்ஞான குளத்துக்கும் ஒன்பதாம் கட்டைக்குமிடையில் சிறிலங்காவின் ஆளில்லா வேவுவிமானம் வீழ்ந்து நொருங்கியது.

□ அமெரிக்காவின் இலங்கைக்கான தூதர் ஜேம்ஸ் லன்ஸ்ரட் திருகோணமலைக்கு ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டார்.

□ அக்கரைப்பற்று ஆயிஸிபாலியா மகாவித்தியாலய பின் ஒழுங்கையில் வைத்து இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி.

□ சுதுமலையில் வீதியால் சென்று கொண்டிருந்த இளைஞர்கள் மீது இனந்தெரியாத குழு வொன்று தாக்குதல் நடத்தியதில் இருவர் படு காயம்.

□ வவுனியா செட்டிகுளம் வீதியில் கிராம அலுவலர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொலை.

**20**

□ எழுவோம் தமிழின உரிமைக்காக எனும் பொங்குதமிழ் தீப்பந்த எழுச்சிப் பேரணி நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்றது.



□ பேலிய கொடபகுதியில் கைக்குண்டு வைத்திருந்ததாக சந்தேகத்தின் பேரில் மூவர் கைது.

□ லெப்.கேணல் மறவன் பயிற்சிப் பாசறையிலிருந்து ஆறாவது துணைப்படை அணி பயிற்சிகளை நிறைவு செய்து வெளியேறியது.



**21**

□ யாழ்.மாவட்டத்தில் சிறிலங்காப் படையினரால் கைதாகிக் காணாமல் போனோரது பெற்றோர் பாதுகாவலர்கள் இணைந்து யாழ். அரச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

□ தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைச் செயலகம் திருகோணமலையில் திறந்து வைப்பு.

**22**

□ யாழ்.மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் மீனவசங்கப் பிரதிநிதிகளுக்கும் யாழ்.மாவட்ட படை அதிகாரிகள், கடற்படை அதிகாரிகளிடையே சந்திப்பு இடம்பெற்றது.

□ வவுனியா-மன்னார் வீதியில் பறையனாளங்குளத்திற்கும் முருங்கனுக்குமிடையில் கட்டையடம்பனில் குப்பை மேட்டில் கிடந்த குண்டு வெடித்ததில் இரு பொலிசார் படுகாயம்.

□ யாழ்ப்பாண மாவட்டத்திற்கான மக்கள் படைகட்டுமானத்தின் ஆறாவது பயிற்சி அணி தனது பயிற்சியை நிறைவுசெய்தது.

□ திருமலை மாவட்டத்தில் வழமையாகவுள்ள இராணுவக் கெடுபிடிகளையும் மீறி தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் படங்களை ஏந்தியவாறு பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் தமிழ்தேசிய எழுச்சி நிகழ்வில் கலந்து கொண்டு தமிழர் தாயகத்திலிருந்து சிறிலங்கா இராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும் எனப் பிரகடனம் செய்தனர்.



**23**

□ மட்டக்களப்பு சாஹிரா வித்தியாலய ஆழிப்பேரலை இடைத்தரிப்பு முகாமில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உட்பட நால்வர் காயம்.

□ மட்டக்களப்பு எல்லை வீதியில் உந்துருளியில் வந்த இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயம்.

# தமிழீழ அரசின் கொடி விரைவில் ஐக்கியநாடுகள் சபையில் பறக்கும்

## -பெல்ஜியத்தில் பா.உறுப்பினர் கஜேந்திரன் உரை

தமிழீழத்தில் தற்போது உள்ள நடைமுறை அரசின் கொடி விரைவில் ஐக்கிய நாடுகள் சபையில் பறக்கும் என்று பெல்ஜியத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழ்ழர் வாழ்வுரிமை முழக்கப் போராட் டத்தில் பங்கேற்றுப் பேசிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்தார்.

உங்களைப் பார்க்கும்போது எங்களுடைய மண் எங்களுடைய கைகளிலே வந்துசேரும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.இந்த உணர்ச்சிகளைக் கேட்டறியும் தேசியத்தலைவர் மகிழ்ச்சியடைவார் என்பதில் சந்தேகமில்லை. தேசியத்தலைவர் வன்னியில் இருந்தாலும் புலம்பெயர் தமிழ் உறவுகள் எத்த கைய உணர்வோடு இருக்கிறார்கள் என்பதை அவர் அறிவார். தேசியத் தலைவர்தான் நம்மை சர்வதேச அளவில் தலை நிமிர்ந்து வாழ்வைத் திருப்பதாக மக்கள் எண்ணுகின்றனர். ஆனால் தன்னுடைய மக்களால்தான் தமிழர்கள் இன்று சர்வதேசத்தில் தலை நிமிர்ந்து நிற்க முடிந்திருக்கிறது என்று தேசியத் தலைவர் கருதுகிறார். அதனை நிரூபிக்கும் வகையில் உணர்வு பூர்வமாக பெரும் எண்ணிக்கையில் இஙகே கலந்து கொண்டுள்ளீர்கள். இந்தக் கூட்டத்தைப் பார்க்கும் ஐரோப்பிய சமூகத்தின் வெள்ளைக்காரர்கள் தமிழ்களது நியாயப்பாடுகளை புரிந்து கொள்வார்கள் என்ற திடமான நம்பிக்கை எமக்கு உண்டு.

பெல்ஜியத்தின் பூரணத்துவமான கட்டமைப்பு நமக்கு இல்லை. இருப்பினும் இந்தப் பேரணியை வெற்றிகரமாக ஒழுங்குபடுத்தியுள்ளீர்கள். தமிழர்களின் வலு இப்போது புரியும். தமிழ் தேசியத்தின் மீதும் தமிழீழ தேசிய தலைவர் மீதும் கொண்டிருக்கும் பற்றும் பாசமும் வெறியும் இப்போது ஐரோப்பியர்களுக்குப் புரியும். எதிர்வரும் காலங்களில் ஐரோப்பிய ஒன்றியம் தனது முடிவை மறுபரிசீலனை செய்யும் சூழ்நிலை உருவாகும். தன்னிகரில்லா தலைவன் காலத்திலே தமிழர் விடுதலைக்கான தீர்வை எட்ட வேண்டும். இலங்கைத் தீவில் சனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அந்தத் தேர்தல் தீர்வைத்தருமா என்ற அவா நம் மக்களிடத்தில் உள்ளது. தென்னிலங்கையில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் செய்யப் போவதை தீர்மானிப்பது நாம்தான். ஆதலால் இராணுவம் மற்றும் அரசியல் ரீதியாக தலைவரின் கரங்களை வலுப்படுத்துவோம். நமது உரிமையை மீட்டெடுப்போம்.

தேசியத்தலைவர் தற்போது 50 ஆவது அகவையை கடந்துள்ளார். தனது 14 ஆவது அகவையில் விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கி இன்று தமிழனுக்கு ஒரு தனியான நிர்வாகக் கட்டமைப்பையும் சகல வளத்தையும் கொண்டதாக உருவாக்கியுள்ளார். நமக்கு தரைப்படை, கடற்படை, வான்படை உண்டு. நாட்டை நிர்வகிக்கும் அரச கட்டுமானங்கள் நிறைவாக உள்ளன. தமிழர் தாயகமான வடக்கு- கிழக்கில் 70 வீதமான நிலப்பரப்பு மீட்கப்பட்டு விட்டன. நாம் மீட்க வேண்டியது வெறுமனே 30 வீதமான நிலப்பகுதி தான். இதை மீட்பது இலகுவான காரியம். தாயகத்திலே இருக்கும் உங்களுடைய உறவுகள் திணிக்கப் படப்போகும் போருக்கும் தயாராக எல்லைப்படை, துணைப்படையாக அணிவகுத்து பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அம்பாறை முதல் யாழ்ப்பாணம் வரை இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர்.

தலைவரின் கட்டளையை நிறைவேற்ற தாயக மக்கள் தயாராக இருக்கிறார்கள். எங்கள் மீதுபோர் திணிக்கப்படும் போது உரிய ஆயுதங்களையும் வளங்களையும் வழங்க வேண்டிய கடப்பாடு உங்களுக்கு உண்டு. ஓயாத அலைகளின் வெற்றியிலும் ஆனையிறவின் வெற்றியிலும் உங்களது பங்களிப்பு பாரியது. தற்போதைய நடைமுறை அரசிலும் உங்களின் பங்களிப்பு பாரியது. உங்களது உதவிகள் தான் நடைமுறை அரசை இயக்கிக் கொண்டிருக்கிறது. இலங்கை அரசுக்கு ஏனைய சர்வதேச நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் உதவி வழங்கி வருகின்றன. ஆனால் தமிழீழ நடைமுறை அரசுக்கு எந்த ஒரு நாடும் உதவிகள் வழங்கவில்லை. புலம்பெயர் மற்றும் தாயகத் தமிழர்களின் உதவியுடன்தான் இந்த அரசாங்கம் இயங்கி வருகின்றது. எவருக்கும் அடிபணியத் தேவையில்லாத சிறப்பான நிர்வாகம் அங்கே நடைபெற்று வருகிறது.

தென்னிலங்கையில் ஜனநாயகம் இல்லை. ஆனால் நமது பகுதியிலே ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துவதில் தலைவர் கண்ணும் கருத்துமாக இருக்கிறார். நமக்கான விடுதலை வெகு தூரத்தில் இல்லை. நம் மக்கள் தலைவரின் பின்னால் அணிதிரண்டு இருக்கிறார்கள். எங்களுடைய மண்ணிலே கால்பதித்து மாசுபடுத்தி நிற்கும் சிங்களப் படை விரைவில் வெளியேற்றப்படும். இனியொரு யுத்தம் வந்தால் சிங்களப்படை வெளியேறறப் பட்டு ஓரிரு வாரங்களில் தமிழர் மண் புனித மண்ணாகிவிடும். நீங்கள் நம்பிக்கையோடும் உறுதியோடும் செயற்பட வேண்டும். உங்களின் பங்களிப்பு இன்னும் சிறிது காலத்திற்குத் தான். தமிழீழத்திலே தற்போதுள்ள நடைமுறை அரசின் தேசியக்கொடியை ஐக்கிய நாடுகள் சபையில் விரைவில் பறக்கச் செய்வோம் என்றார் கஜேந்திரன்.

# அன்பு தாய், சேய் போசாக்குப் பூங்காவிற்கான நீர்விநியோகப் பகுதி திறந்துவைப்பு

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அக்கராயனில் அமையப்பெற்றுள்ள அன்பு தாய்,சேய் போசாக்குப் பூங்காவிற்குத் தேவையான நீர்விநியோகத்திற்கான ஆரம்ப நிகழ்வொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

பிற்பகல் 3.30 மணியளவில் பூங்காவிற்கான நீர்த் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நோக்கில் நிறுவப்பட்ட இந்நீர்விநியோகப்பகுதி திறந்து வைக்கும் ஆரம்ப நிகழ்வு அன்பு தாய்,சேய் போசாக்குப் பூங்கா நிர்வாகி செல்வி ம.ஞானரூபி தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மங்கல விளக்கினை அக்கராயன் பிரதேச அபிவிருத்தி நிறுவன உதவிப் பணிப்பாளர் கோ.நல்லையா, சந்தோசம் உளவளத்துணை இல்லத்தின் இணைப்பாளர் சுதாகரன் ஆகியோர் ஏற்றியதைத் தொடர்ந்து தேசியக்கொடி, தமிழர் புனர்வாழ்வுக் கழகக்கொடி என்பன ஏற்றிவைக்கப்பட்டன.

தொடர்ந்து நீர்விநியோகத்தின் பிரதான நீர்த்தாங்கியின் பெயர்ப்பலகையினை ஸ்கந்தபுரம் -அக்கராயன் கிராம சேவையாளரும் அன்பு தாய், சேய் போசாக்குப் பூங்காவின் ஆலோசகருமான மகேந்திரன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

நீர்விநியோகக் குழாய்கள் பொருத்தப்பட்ட பகுதியினை ஒக்ஸ்பாம் நிறுவன பிரதிநிதி செந்தில்குமரன் திறந்துவைக்க, குளியலறைப் பகுதிக்கான நீர்விநியோகக்குழாயினை அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தைச் சார்ந்த கிருஸ்ணபிள்ளை திறந்துவைத்தார். இதனைத் தொடர்ந்து கருத்துரைகள் இடம்பெற்றன.

# டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் உதவியைப்பெற பிரதமர் அக்கறை செலுத்தவில்லை

## ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

டோக்கியோ உதவி வழங்கும் நாடுகள் உறுதியளித்த உதவித் தொகையான 45 ஆயிரம் கோடி ரூபாவைப்பெற பிரதமர் மகிந்த ராஜ பக்ஷ முயற்சிக்கவில்லை•இதனால் நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்துள்ளது என எதிர்க்கட் சித்தலைவரும் சனாதிபதி வேட்பாளரு மான ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

டோக்கியோ உதவி வழங்கும் நாடுகள் உறுதியளித்த நிதியுத வியை சிறிலங்கா பிரதமரும் சுதந் திரக்கட்சி வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ பெற்று பயன்படுத்தி இருந் தால் நாட்டின் வேலை வாய்ப்பின்மை ஒழிக்கப்பட்டிருக்கும் என அநுராத புரத்தில் கலாவெவ மற்றும் கெக்கிராவ ஆகிய இடங்களில் நடைபெற்ற தேர் தல் பரப்புரைக் கூட்டங்களில் அவர் இந்த குற்றச்சாட்டை தெரிவித்துள் ளார்.டோக்கியோ உதவி வழங்கும் நாடுகள் 45ஆயிரம் மில்லியன் ரூபாவை அளிக்க ஒப்புக்கொண்டன. அமைதி முயற்சிகளை முன்னெடுக்கவும் நாட்டை அபிவிருத்தி செய்யவும் இந்தத் தொகை அளிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இந்தத்தொகையைப் பெறுவதில் தற்போதைய அரசாங் கமும் அதன் கூட்டணிக் கட்சியான ஜே.வி.பி.யும் அக்கறை செலுத்த வில்லை. இந்த நிதியை நாம் பயன் படுத்தியிருந்தால் நாட்டின் வேலை வாய்ப்பின்மை பிரச்சினையை ஒழித்தி ருக்க முடியும். ஆதலால் இளை ஞர்களின் வேலைவாய்ப்பு குறித்து பேசுவதற்கு இவர்களுக்கு உரிமை இல்லை. சனாதிபதியாக நான் தேர் தெடுக்கப்பட்டால் இந்தத் தொகையை பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள் ளப்படும். நாட்டின் வேலைவாய்ப் பின்மை பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

வேலை வாய்ப்புகளை உருவாக் கும் வகையில் வர்த்தக மண்டலங்க ளும் சுற்றுலா விடுதிகளும் வெளி நாட்டு நிதியுதவியின் கீழ் உரு வாக்கப்படும் என்றார் ரணில் விக்கிர மசிங்க.

# சாவு அறிவித்தல்



## துரைராசா தையல்நாயகி

*வேலணையைப் பிறப்பிடமாகவும் சரவணை மேற்கை வசிப்பிடமாகவும் தற்போது இலக்கம் 360 கரியாலை நாகபடுவானில் வசித்து வந்தவருமாகிய துரைராசா தையல்நாயகி 22.10.2005 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்ற சின்னத்துரை தங்கமுத்துவின் பாசமிகு மகளும், வல்லிபுரம்-துரைராசாவின் அன்பு மனைவியும் மற்றும் சுதேந்திரன் (கரியாலை நாகபடுவான்), செல்வேந்திரன் (தபால் உத்தியோகத்தர் யாழ்ப்பாணம்), விஜியேந்திரன் (கொழும்பு), அருளேந்திரன் (யாழ்ப்பாணம்), கமலேந்திரன் (ஜேர்மன்), சிவாயிந்திரன் (நாச்சிக்குடாசந்தி லக்ஷ்மி உணவகம்), சத்தியேந்திரன் (ஜேர்மன்), அருந்தவராணி (யாழ்ப்பாணம்), அருந்தவநாயகி (கரியாலை நாகபடுவான்), அருந்தவமலர் (கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மற்றும் செல்வராணி, சாரதா, விமலராணி (கொழும்பு), வசந்தி, ஞான செல்வராணி (ஜேர்மன்), ஜெயரூபா, சுகந்தி (ஜேர்மன்), மகேந்திரராசா, அமரர் தர்மபாலன், முரளிதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். மற்றும் சுமலதா, சுகிதா, சுகந்தன், சுபனேசன், ஜெயரூபன், செல்வரூபன், உசா, விஜயந்தன், நிறோஜா, நிசாந்தினி, தட்சிகா, நிசந்தன், சயந்தன் (பிரான்ஸ்),சுயந்தன், லக்சனா, துசந்தன், திவ்யா, கௌசி, றஜிதா, தினேஷ், நிருஷா, லட்சன், டினுசன்,விதுஷன், தர்சிகா, தாரணி, தனுஜன், ஜஸ்மிகா (ஜேர்மன்), ஜஸ்மிகன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26.10.2005 இன்று முற்பகல் 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.*

தகவல்:-கணவர்,
**வல்லிபுரம்-துரைராசா,**
**மற்றும் பிள்ளைகள்.**

(6885)

# பதினொரு தமிழர்கள் தங்காலையில் கைது

தங்காலையில் உரிய ஆவணங்களின்றி நடமாடியதாக 11 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.தங்காலையிலிருக்கும் சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் வீட்டிற்கருகிலுள்ள மதுபானசாலையில் இவர்கள் மது அருந்திக்கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டுள்ளனர். தங்காலை வைத்திய சாலையின் கட்டட நிர்மாண வேலைகளுக்காக லிந்துலை மற்றும் மலையகத்தின் ஏனைய பிரதேசங்களிலிருந்து தாங்கள் வந்ததாக அவர்கள் பொலிசாரிடம் விளக்கமளித்தனர்.

எனினும் தங்களை இவர்கள் உரியமுறையில் அடையாளப்படுத்த வில்லை என்றும் சில சந்தேக நபர்கள் முரணான தகவல்களை வழங்கி யுள்ளனர் எனவும் தங்காலை பொலிசார் தெரிவிக்கின்றனர். இவர்கள் 11 பேரும் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

# ஜெயரட்ணத்தை 6 மாதமாக தேடும் சிறிலங்காப் படை

கல்கிசை பொலிசாரின் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவின் இரண்டாவது அதிகாரியாகப் பணியாற்றிய ரி.ஜெயரட்ணம் கடத்தப்பட்டு ஆறு மாதங்கள் கடந்துள்ள போதிலும் அவரைப்பற்றிய தகவல்களை இதுவரை கண்டறிய படையினால் முடியாதுபோயுள்ளது. கடத்தப்பட்ட ஜெயரட்ணம் கல்கிசை பயங்கரவாதத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி மொகமட் நீலாப்தீனுக்கு அடுத்த நிலை அதிகாரியாகக் கடமையாற்றி வந்தார். பின்னர் அங்கிருந்து வனாத்தவில்லுப் பிரதேசத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்று மீண்டும் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றி வந்தார்.

இந்த நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி அதிகாலை கல்கிசை உணவு விடுதிக்கு அருகில் ஜெயரட்ணம் கடத்தப்பட்டார். ஜெயரட்ணம் கடத்தலையடுத்து கல்கிசை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதி காரி நீலாப்தீன் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# Vacancy Announcement Secretary / Welcome Assistant

The International Committee of the Red Cross, Kilinochchi Subdelegation, is seeking for a dedicated female professional willing to assume responsibilities as a **Welcome Assistant/ Secretary.**

The candidate should have the following **qualifications:**

- ☒ Completion of 'A' Level Education. Higher (university) degree preferred
- ☒ Excellent computer-literacy
- ☒ Excellent spoken and written English and Tamil
- ☒ Working experience with an international organization and/or in a secretarial position
- ☒ Professional qualification in secretariat

**Core responsibilities** include:

- ☒ Drafting of external correspondence in Tamil / English
- ☒ Reception and handling of internal / outgoing correspondence
- ☒ Filing of institutional documents
- ☒ Preparation of accommodation arrangements for incoming visitors
- ☒ Conduct welcome-briefing for arriving visitors / expatriates
- ☒ Assume team-leader responsibilities for a team of 8 house-maids

**Employment Conditions:**

According to ICRC's National Scale and employment conditions

We encourage suitable candidates to send their complete CVs to ICRC's office in Kilinochchi before **Thursday, 3rd of November 2005**. Qualified candidates will be contacted for interviews.

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**
Subdelegation Kilinochchi
Iraniamadhu Junction
Kilinochchi
Phone: 071 237 56 97 / 071 229 66 80

(சி-13116)



# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல் - கார்த்திகை 2005

**நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு**

யா/ந/1206 திரு.சின்னப்பு நடேசபிள்ளை.
யா/ந/1221 திரு. சண்முகம் பரமேஸ்வரன்.
யா/ந/1333 திருமதி. பூமணி கதிர்காமத்தம்பி.
யா/ந/1334 திருமதி.பொன்னம்மாபொன்னுத்துரை.
யா/ந/1355 திரு.பொன்னுத்துரை தனபாலசிங்கம்.
யா/ந/1358 திரு. நாகலிங்கம் துரைசிங்கம்.
யா/ந/1364 திரு. செல்லப்பா வல்லிபுரம்.
யா/ந/1376 திருமதி. கனகம்மா கனகசபை.
யா/ந/1385 திரு. சண்முகம் இராமநாதன்.
யா/ந/1413 திருமதி. மனோன்மணி சண்முகவேல்.
யா/ந/1456 திரு. குப்புசாமி நாகப்பு.
யா/ந/1516 திருமதி.மகேஸ்வரிவேலாயுதபிள்ளை.
யா/ந/1520 திரு. அய்யாத்துரை நாகரத்தினம்.
யா/ந/1530 திரு. செல்லையா இராசலிங்கம்.
யா/ந/1531 திரு. கந்தையா சண்முகசுந்தரம்.
யா/ந/1569 திரு. செல்லையா பாலசுப்பிரமணியம்.
யா/ந/1584 திரு. சிவசம்பு கந்தசாமி.
யா/ந/1588 திரு. சங்கரி கந்தசாமி.
யா/ந/1601 திரு. செல்வராசா மகாலிங்கம்.
யா/ந/1620 திருமதி. மங்களேஸ்வரி கதிரவேல்.
யா/ந/1640 திரு.முருகப்பா பழனியப்பன்.
யா/ந/1645 திருமதி. புனிதசீலி பரமேஸ்வரன்.
யா/ந/1648 திருமதி. பார்வதி நடராசா.
யா/ந/1662 திருமதி.கெங்காதேவிஇரத்தினசிங்கம்.
யா/ந/1682 திரு.சுப்பிரமணியம் சற்குணம்.
யா/ந/1685 திருமதி.சொர்ணபவானி சண்மு கலிங்கம்
யா/ந/1728 திரு. குமாரசாமி தர்மலிங்கம்.
யா/ந/1737 திரு. ஏகாம்பரம் தெய்வேந்திரராசா.
யா/ந/1748 திரு. ஐயாத்துரை வேலாயுதபிள்ளை.
யா/ந/1805 திருமதி. இரத்தினம் நல்லையா.
யா/ந/1810 திரு. வல்லிபுரம் இரத்தினசபாபதி.
யா/ந/1925 திரு. சுந்தரம் முத்தையா.
யா/ந/1946 திரு. கந்தையா நாகராசா.
யா/ந/1963 திரு. நடராசா பத்மநாதன்.
யா/ந/1972 திருமதி. பரமேஸ்வரி கனகசுந்தரம்.
யா/ந/1978 திரு. கந்தையா பேரம்பலம்.
யா/ந/1983 திரு. வல்லிபுரம் பொன்னுச்சாமி.
யா/ந/2045 திரு.இரத்தினசபாபதிக்குருக்கள் சந்தானகோபாலசர்மா.
யா/ந/2046 திருமதி. சரஸ்வதி தம்பிராஜா.
யா/ந/2052 திரு. நடராசா சச்சிதானந்தன்.
யா/ந/2109 திரு. பொன்னு வைத்திலிங்கம்.
யா/ந/2114 திரு.பொன்னுத்துரைஅன்ரனிப்பிள்ளை.
யா/ந/2117 திரு. கந்தையா அன்னலிங்கம்.
யா/ந/2152 திருமதி. கனகம்மா நல்லையா.
யா/ந/2166 திரு. நடராசா கந்தசாமி.
யா/ந/ 2167 திரு. ஆறுமுகம் கந்தையா.
யா/ந/2172 திருமதி. கண்மணி தவரத்தினம்.
யா/ந/2181 திரு. நாகலிங்கம் குணசிங்கம்.
யா/ந/2189 திரு. சுப்பிரமணியம் லோகதாசன்.
யா/ந/2197 திரு. இரத்தினராசா மகேஸ்வரன்.
யா/ந/2199 திரு. இராமநாதன் மகேசன்.
யா/ந/ 2202 திரு. சின்னத்துரை மகாதேவா.
யா/ந/2218 திரு. கந்தசாமி இராசரத்தினம்.
யா/ந/ 2243 திருமதி. பரமயோகம் கார்த்திகேசு.
யா/ந/ 2257 செல்வி. பிறிம்றோஸ் குணரட்ணம்.
யா/ந/2295 திருமதி.சரஸ்வதி சுப்பிரமணியம் செட்டியார்.
யா/ந/2305 திரு.கனகசபைசிவசுந்தரம்சிவப்பிரகாசம்.
யா/ந/2339 திரு. வேலுப்பிள்ளை சொர்ணலிங்கம்.
யா/ந/2344 திரு. யக்கோப்பிள்ளை சிமியோன்.
யா/ந/2376 திருமதி. திரேசம்மா கிளமென்ற்.
யா/ந/ 2388 திருமதி. விமலா ஜெகநாதன்.
யா/ந/2396 திருமதி. யோகம்மா மனோகரா.
யா/ந/2416 திருமதி. மகேஸ்வரி சோமசுந்தரம்.
யா/ந/2441 திரு. நடராசா சிவராசா.
யா/ந/2467 திரு. நாகர் அம்பலவாணர்.
யா/ந/2470 திரு. சுப்பிரமணியம் பாலச்சந்திரன்.
யா/ந/2486 திரு. முத்து கணேசு.
யா/ந/2512 திரு. பெரியதம்பி இராசேந்திரன்.
யா/ந/2513 திருமதி. மகேஸ்வரி இரத்தினம்.
யா/ந/2514 திரு. சபாபதி இராசதுரை.
யா/ந/2518 திரு. பெரியதம்பி சிவகடாச்சம்.
யா/ந/ 2566 திரு. வேலுப்பிள்ளை ஆறுமுகம்.
யா/ந/2575 திருமதி. ஞானேஸ்வரி தர்மலிங்கம்.
யா/ந/2586 திரு. கந்தையா குணரத்தினம்.
யா/ந/2605 திரு.சிவசாமிஐயர் குமாரராஜக்குருக்கள்.
யா/ந/2616 திரு. இராசரத்தினம் முத்துக்குமாரு.
யா/ந/2642 திரு. கனகரட்ணம் பத்மநாதபிள்ளை.
யா/ந/ 2645 திருமதி. பரமேஸ்வரி சபாரத்தினம்.
யா/ந/2662 திரு. கந்தையா இராசநாயகம்.
யா/ந/2681 திருமதி.இராசமணிசண்முகம்பிள்ளை.
யா/ந/2687 திருமதி.சறோஜினிதேவி தணிகாசலம்.
யா/ந/2689 திரு. தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்.
யா/ந/2707 திருமதி.மனோன்மணிசெல்வரத்தினம்.
யா/ந/2708 திரு. கந்தையா சுப்பிரமணியம்.
யா/ந/ 2734 திரு. குமாரசாமி செல்வநாயகம்.
யா/ந/2743 திரு. அப்புக்குட்டி சுப்பிரமணியம்.
யா/ந/2753 திரு. தாமோதரம்பிள்ளை துரையப்பா.
யா/ந/2773 திரு. ஆத்மநாத வைத்தியநாதசர்மா.
யா/ந/2783 திருமதி. அருளம்மா குமாரசாமி.
யா/ந/2817 திருமதி. கணேஸ்வரி கந்தவனம்.
யா/ந/2835 திருமதி.கனகாம்பிகைபொன்னம்பலம்.
யா/ந/2846 திருமதி. கமலாம்பிகை தம்பிமுத்து.
யா/ந/2852 திரு. சுப்பிரமணியம் மயில்வாகனம்.
யா/ந/2872 திரு. கதிரேசு நவரத்தினம்.
யா/ந/2874 செல்வி. நகுலேஸ்வரி தம்பிமுத்து.
யா/ந/2887 திரு. குமாரசாமி பரமேஸ்வரன்.
யா/ந/2889 திரு. சபாரட்ணம் பத்மநாதன்.
யா/ந/2907 திருமதி. பொன்மலர் சின்னத்தம்பி.
யா/ந/2914 திரு. சிவஞானபோதம் ரவீந்திரன்.
யா/ந/2936 செல்வி. மாலினி இரகுநாதன்.
யா/ந/2951 திரு. கந்தையா செல்லத்துரை.
யா/ந/2954 திரு. கந்தையா சிவராசா.
யா/ந/ 2959 திருமதி. சிவபாக்கியம் கோணேசன்.
யா/ந/2974 திரு. கந்தையா சண்முகலிங்கம்.
யா/ந/2985 திருமதி.செல்லம்மா திருஞானசுந்தரம்.
யா/ந/2991 திருமதி. சரஸ்வதி மனோகரன்.
யா/ந/3046 திருமதி.காவேரியம்மா அந்தோனிப் பிள்ளை.
யா/ந/3051 திருமதி.இரத்தினேஸ்வரி அரியரட்ணம்
யா/ந/3126 திரு.பொன்னை யாகதிர்வேலாயுதபிள்ளை
யா/ந/3131 திரு.இராஜரெட்ணம் புறுடி.
யா/ந/3135 திரு.மனுவல்பிள்ளை அருமைத்துரை.
யா/ந/3140 திருமதி.மங்களேஸ்வரி ரவீந்திரநாதன்.
யா/ந/3144 திருமதி. மகேஸ்வரி தர்மலிங்கம்.
யா/ந/3181 திரு. செல்லர் பொன்னுத்துரை.
யா/ந/3186 திருமதி. புவனேஸ்வரி துரைராசா.
யா/ந/3206 திரு. நாகர் இராசையா.
யா/ந/3290 திருமதி. சிவபாக்கியம் சுந்தரலிங்கம்.
யா/ந/3293 திரு. தில்லை சின்னையா.
யா/ந/3303 திருமதி. சந்திரவதனா விஜயதர்மா.
யா/ந/3313 திரு. கணபதிப்பிள்ளை சோதிநாதன்.
யா/ந/3331 திருமதி. திருப்பதி நடராசா.
யா/ந/3347 திருமதி. திருபுவனேஸ்வரி கணபதி.
யா/ந/3360 திருமதி. ஜெயலட்சுமி துரைராஜா.
யா/ந/3363 திரு.ஆசீர்வாதம்.வேதநாயகம் துரைரட்ணம்
யா/ந/3407 திரு. சின்னத்தம்பி நடராசா.
யா/ந/ 3437 திரு.கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம்.
யா/ந/3439 திரு. சின்னத்துரை மயில்வாகனம்.
யா/ந/3456 திருமதி. பரமேஸ்வரி நாகலிங்கம்.
யா/ந/3461 திரு. செல்லன் வைரமுத்து.
யா/ந/3468 திருமதி. அன்னலச்சுமி தியாகேசர்.
யா/ந/3471 திரு. இராசரத்தினம் தாஸ்.
யா/ந/3482 திரு. பொன்னையா சுந்தரம்.
யா/ந/3488 திரு. சின்னையா பொன்னுத்துரை.
யா/ந/3499 திரு. கணபதிப்பிள்ளை நாகராசா.
யா/ந/3556 திருமதி. சிவநாயகி நடராசா.
யா/ந/3574 திருமதி. நிரூபராணி அருணாசலம்.
யா/ந/3609 திரு. இராமலிங்கம் அன்னலிங்கம்.
யா/ந/3611 திரு. மயில்வாகனம் மாணிக்கவாசகர்.
யா/ந/3667 திரு. வைத்திலிங்கம் கனகரத்தினம்.
யா/ந/3726 திரு.சிதம்பரப்பிள்ளை அரியபுத்திரன்.
யா/ந/3762 திரு. பிரான்சிப்பிள்ளை கனகரட்ணம்.
யா/ந/3765 திருமதி.உள்ளக்கமலம் தனபாலசிங்கம்
யா/ந/3772 திருமதி. பாக்கியம் பொன்னையா.
யா/ந/3794 திருமதி. தனலக்சுமி கனகசபை.
யா/ந/3817 திரு. கந்தையா கனகரத்தினம்.
யா/ந/3827 திரு. பொன்னையா ஜீவரட்ணம்.
யா/ந/3834 திருமதி. சிவபாக்கியம் இராசதுரை.
யா/ந/3864 திரு.கணபதிப்பிள்ளை துளசிகாமணி.
யா/ந/3882 திரு. நாகலிங்கம் சுந்தரலிங்கம்.
யா/ந/3900 திரு. திருவிளங்கம் யோகராசா.
யா/ந/3910 திருமதி. மகேஸ்வரி குமாரசாமி.
யா/ந/3922 திருமதி. கமலாதேவி சுந்தரலிங்கம்.
யா/ந/3929 திருமதி. மரகதம் சுந்தரமூர்த்தி.
யா/ந/ 3935 திருமதி.முத்துப்பிள்ளைசின்னத்தம்பி
யா/ந/3942 திருமதி. தங்கம்மா ஐயாத்துரை.
யா/ந/3951 திரு.துரையப்பா இரத்தினசபாபதி.
யா/ந/3964 திரு.மாணிக்கவாசகபிள்ளைகனகசபை.
யா/ந/3974 திருமதி. லீலாவதி செல்லத்துரை.
யா/ந/3977 திரு. கதிரவேலு தனபாலசிங்கம்.
யா/ந/3989 திரு. செல்லத்துரை பாலசிங்கம்.
யா/ந/4056 திரு. பேரம்பலம் பாலசுப்பிரமணியம்.
யா/ந/4085 திரு.அருணாசலம்முத்துக்கிருஷ்ணன்.
யா/ந/4090 திருமதி.பவளக்கொடி சிவப்பிரகாசம்.
யா/ந/4111 திரு.நாகமுத்து இரத்தினசபாபதி.
யா/ந/4128 திரு.இராமச்சந்திரன் செல்லப்பா.
யா/ந/4136 திருமதி. சுகிர்தரட்ணம் சிவஞானம்.
யா/ந/4144 திரு. றோய்யோதிகராசன் செல்லப்பா.
யா/ந/4154 திரு. செல்வத்துரை தர்மலிங்கம்.
யா/ந/4165 திருமதி. தங்கம்மா தெய்வேந்திரம்.
யா/ந/4194 திருமதி. நல்லம்மா கந்தசாமி.
யா/ந/4201 திரு. தம்பு நடராசா.
யா/ந/4210 திரு. கந்தையா மாணிக்கம்.
யா/ந/4216 திரு. நடராசா சண்முகநாதன்.
யா/ந/4252 திரு. பொன்னையா சண்முகநாதன்.
யா/ந/4256 திருமதி. மதிவதனசோதி நடராசா.
யா/ந/4264 செல்வி.சிவபாக்கியம் வீரகத்திப்பிள்ளை
யா/ந/4267 திரு. சின்னையா சந்திரசேகரம்.
யா/ந/4273 திருமதி. குணவதி தர்மலிங்கம்.
யா/ந/4277 திருமதி. நாகேஸ்வரி கனகரெத்தினம்.
யா/ந/4287 திரு. செல்லையா வன்னியசிங்கம்.
யா/ந/4309 திரு.இரத்தினசிங்கம் கிருஷ்ணமூர்த்தி
யா/ந/4316 திருமதி. அன்னலட்சுமி முத்துலிங்கம்.
யா/ந/4330 திரு. நாராஜணசாமி நடராஜா.
யா/ந/ 4332 திருமதி. சரஸ்வதி சிவானந்தம்.
யா/ந/4337 திரு. குழந்தைவேலு பாலேந்திரா.
யா/ந/4350 திருமதி. வடிவாம்பிகை கணேஸ்.
யா/ந/4359 திருமதி. இந்திராதேவி கனகலிங்கம்.
யா/ந/4360 திருமதி. கமலாசனி அரியரட்ணம்
யா/ந/ 4374 திருமதி. இந்திரா சீவரெட்ணம்.
யா/ந/4390 திரு. அம்பலவாணர் ஜெகநாதன்.
யா/ந/4406 திருமதி. பூரணம் இராசேந்திரம்.
யா/ந/4422 திருமதி. சிவபாக்கியம் தர்மலிங்கம்.
யா/ந/4443 திரு. கந்தையா விஷ்ணுகாந்தி.
யா/ந/4481 திருமதி.சிவகாமிப்பிள்ளைபொன்னுத்துரை.
யா/ந/4498 திருமதி. ஞானம்மா இரத்தினம்.
யா/ந/4553 திருமதி. அன்னம்மா பரராசசிங்கம்.
யா/ந/4572 திரு.முத்துத்தம்பி துரைராஜா.
யா/ந/4595 திரு.சபாபதிப்பிள்ளை மாணிக்கராசா.
யா/ந/4626 திருமதி. விமலாதேவி துரைராசா
யா/ந/4645 திரு. கந்தையா தில்லைநாதன்.
யா/ந/4668 திரு. தவசி பிள்ளையார்.
யா/ந/4695 திரு. முத்துக்குமாரு சண்முகசுந்தரம்.
யா/ந/4696 திருமதி. மகாலெட்சுமி இராசலிங்கம்.
யா/ந/4711 திருமதி. சின்னம்மா பேரின்பம்.
யா/ந/4713 திரு. செல்லப்பா இரத்தினசபாபதி.
யா/ந/4724 திரு.சபாபதிப்பிள்ளைகுலராஜசிங்கம்.
யா/ந/4730 திருமதி. யுவராணி மகாதேவா.
யா/ந/4732 திருமதி.மங்கையற்கரசி சோமசுந்தரம்.
யா/ந/4741திரு.தில்லையம்பலம்சிறிஸ்கந்தராஜா
யா/ந/4746 திரு. பழனித்துரை அம்பிகாபதி.
யா/ந/4759 திரு. சின்னையா சிவப்பிரகாசம்.
யா/ந/4786 திருமதி. ருக்மணி செல்வநாதன்.
யா/ந/4813 திருமதி.ஞானகமலாம்பிகை பொன்னம்பலம்.
யா/ந/4820 திருமதி. இராசலட்சுமி சோமசுந்தரம்.
யா/ந/4834 திரு.செல்லையா திருநாவுக்கரசு.
யா/ந/4837 திரு. வைத்திலிங்கம் துரைராஜா.
யா/ந/4843 திருமதி.இராமத்திலகம் வேலுப்பிள்ளை.
யா/ந/4845 திரு. சபாபதி திருநாவுக்கரசு.
யா/ந/4857 திரு. அப்பாத்துரை அருமைராஜா.
யா/ந/4876 திருமதி. சறோஜனாதேவி சிற்றம்பலம்.
யா/ந/4882 திரு. திருநாவுக்கரசு பத்மநாதன்.
யா/ந/4892 திருமதி. சறோஜினி ஆனந்தலிங்கம்.
யா/ந/4918 திருமதி. செல்லம்மா சின்னத்தம்பி.
யா/ந/4953 திருமதி. இராசேஸ்வரி தர்மசீலன்.
யா/ந/5047 திருமதி. மகேஸ்வரி நடராசா.
யா/ந/5050 திருமதி. நல்லம்மா கனகசபை.
யா/ந/5062 திரு. அருளம்பலம் இராஜேந்திரா.
யா/ந/5068 திரு. சின்னையா கதிரவேலு.
யா/ந/5072 செல்வி. கமலாம்பிகை அருணாசலம்.
யா/ந/5078 திருமதி. புஸ்பராணி மகாலிங்கம்.
யா/ந/5107 திரு. தம்பிமுத்து சீவரத்தினம்.
யா/ந/5115 திரு. வ.கந்தையா தர்மலிங்கம்.
யா/ந/ 5131 திருமதி.மலர்இராசமணி.
யா/ந/5155 திரு. பொன்னம்பலம் ஆறுமுகம்.
யா/ந/5168 திருமதி. தனலக்சுமி துரைசிங்கம்.
யா/ந/5174 திருமதி.பொன்மாணிக்கம் இராமமூர்த்தி
யா/ந/5179 செல்வி. இலட்சுமி சின்னப்பிள்ளை.
யா/ந/5196 திருமதி.ஞானபுஷ்பம் செல்வநாயகம்.
யா/ந/5217 திரு. நாகமுத்து பூபாலசிங்கம்.
யா/ந/5242 திருமதி. சுந்தரம் சுப்பிரமணியம்.
யா/ந/5267 திரு. கந்தன் வல்லிபுரம்.
யா/ந/5278 திருமதி. மகேஸ்வரி செல்வரட்ணம்.
யா/ந/5292 திரு. சின்னப்பு நவரத்தினம்.
யா/ந/5310 திரு.பொன்னுத்துரை இரத்தினசிங்கம்.
யா/ந/5323 திருமதி.செயரெட்ணம் தம்பிராசா.
யா/ந/5368 திரு. வேலப்பன் சண்முகசுந்தரம்.
யா/ந/5372 செல்வி. கமலாவதி செல்லத்துரை.
யா/ந/5382 திருமதி.பிலோமினா சுகிர்தமலர் தம்பிப்பிள்ளை
யா/ந/5409 திருமதி.இந்திராணி சிவசுப்பிரமணியம்.
யா/ந/5417 திரு.தில்லைநாதன் கனகநாதன்.
யா/ந/5427 திரு.நாகநாதன் திருச்செல்வம்.
யா/ந/5433 திருமதி.சோதிமணியம்மாசெல்லத்துரை.
யா/ந/5466 திரு. கணபதிப்பிள்ளை சபாநாயகம்.
யா/ந/5473 திருமதி. தங்கம்மா தியாகராசா.
யா/ந/5475 திரு. சுப்பையா தேசிகநாதன்.
யா/ந/5477 திருமதி.பங்கஜவல்லியம்மாசெல்லத்துரை.
யா/ந/5494 திரு. கந்தையா நல்லநாதன்.
யா/ந/5503 திருமதி. நாகேஸ்வரி பிரம்மானந்தா.
யா/ந/ 5504 திருமதி. கனகேஸ்வரி நடராஜா.
யா/ந/5506 திருமதி. கனகேஸ்வரி நடராஜா.
யா/ந/5512 திரு.கனகசபை கதிரவேலுப்பிள்ளை.
யா/ந/5524 திருமதி. பராசக்தி இராஜேந்திரம்.
யா/ந/5543 திரு.சங்கரப்பிள்ளை பாலச்சந்திரன்.
யா/ந/5564 திரு. சின்னையா பரமலிங்கம்.
யா/ந/5568 திரு. கந்தையா சிவராசா.
யா/ந/5572 திருமதி. அன்னலட்சுமி துரைசிங்கம்.
யா/ந/5594 திருமதி.தங்கரத்தினம் இராமச்சந்திரன்.
யா/ந/5599 திருமதி.புவனேஸ்வரிதிருஞானசம்பந்தர்.
யா/ந/5611 திருமதி.திலகவதி சதாசிவம்.
யா/ந/5615 திருமதி.பத்மாவதி பாலசிங்கம்.
யா/ந/5629 திருமதி.இரத்தினேஸ்வரி கணேஸ்.
யா/ந/5632 திருமதி.கமலாதேவி இரத்தினலிங்கம்.
யா/ந/5635 திரு. நடராசா ஜெகநாதன்.
யா/ந/5637 திரு. நாகலிங்கம் சோமசுந்தரம்.
யா/ந/5679 திருமதி. புவனேஸ்வரி இராசரத்தினம்.
யா/ந/5690 திரு. சுப்பிரமணியம் பசுபதி.
யா/ந/5721 திருமதி.கௌரியம்மாகனகரெத்தினம்
யா/ந/ 5736 திரு.சின்னையாசெல்லையாஇராசரத்தினம்
யா/ந/5747 திரு. இராசையா துரைராசா.
யா/ந/5761 திரு. பொன்னு செல்வரட்ணம்.
யா/ந/5774 திரு. ஆறுமுகம் செல்லையா.
யா/ந/5786 திருமதி. நாகரத்தினம் சுப்பிரமணியம்.
யா/ந/5796 திருமதி. சரஸ்வதி தனபாலசிங்கம்.
யா/ந/5830 திரு. கந்தர் இராசரத்தினம்.
யா/ந/5854 திரு. சண்முகம் சுந்தரம்.
யா/ந/5878 திருமதி. பரமேஸ்வரி துரைராசா.
யா/ந/5896 திருமதி. மனோன்மணி சரவணமுத்து.
யா/ந/5908 திருமதி. பரமேஸ்வரி பரமலிங்கம்.
யா/ந/ 5932 திருமதி. பத்மாவதி செல்வராசா.
யா/ந/ 5939 திரு. சுப்பையா கனகரத்தினம்
யா/ந/5942 திருமதி. பாக்கியம் ஞானப்பிரகாசம்.
யா/ந/5953 திருமதி.பாக்கியலட்சுமிமயில்வாகனம்.
யா/ந/5963 திருமதி. அரியமலர் ஆறுமுகம்.
யா/ந/5988 திரு. மதியாபரணம் மகேசன்.
யா/ந/6008 திருமதி. செல்லம்மா இராசரத்தினம்.
யா/ந/6049 திருமதி. மகேஸ்வரி தம்பிஐயா.
யா/ந/6056 திரு. கணபதி கனகன்.
யா/ந/6061 திருமதி. பரமேஸ்வரி சின்னத்துரை.
யா/ந/6062 திருமதி. பரமேஸ்வரி சண்முகராசா.
யா/ந/6105 திரு. தம்பையா பரராசசிங்கம்.
யா/ந/6107 திருமதி. அரசம்மா செல்லையா.
யா/ந/6108 திரு. அப்பாப்பிள்ளை நல்லையா.
யா/ந/6132 திரு. செல்லர் அரசலிங்கம்.
யா/ந/6152 திரு. ஐயன் நடேசு.
யா/ந/6154 திரு. செல்லையா இரத்தினசிங்கம்.
யா/ந/6171 திரு. கணபதி நடேசன்.
யா/ந/ 6179 திரு. சுப்பையா திருநாவுக்கரசு.
யா/ந/6183 திரு. இராஜேந்திரம் கிருஷ்ணசுவாமி.
யா/ந/6187 திருமதி.பாக்கியலட்சுமிஜெயரட்ணம்.
யா/ந/ 6205 திருமதி. இராசலெட்சுமி தருமலிங்கம்.
யா/ந/6236 திருமதி. நாகம்மா தம்பிராசா.
யா/ந/6242 திருமதி. நேசம்மா அப்புத்துரை.
யா/ந/6260 திரு.கோணேசபிள்ளைசிவபாதசுந்தரம்
யா/ந/6271 திரு. நாகன் இராசையா.
யா/ந/6295 திரு. கந்தையா நடராசா.
யா/ந/6305 திரு. வி. கந்தையா இராசதுரை.
யா/ந/6318 திரு. செல்லையா இராசரத்தினம்.
யா/ந/6336 திருமதி. செல்லம்மா கந்தையா.
யா/ந/6365 திருமதி. பார்வதி சண்முகநாதன்.
யா/ந/6384 திரு. தாவீது பிரான்சிஸ்.
யா/ந/6385 திருமதி. சரஸ்வதி ஜெயராசசிங்கம்.
யா/ந/6394 திருமதி. பராசக்தி இராசையா.
யா/ந/6428 திரு.கணபதிப்பிள்ளைசெல்வநாயகம்.
யா/ந/6431 திருமதி.றெஜினாகனகம்மாபரஞ்சோதி.
யா/ந/6437 திரு.சின்னத்தம்பி மகேந்திரநாதன்.
யா/ந/6438 திரு. சிவஞானம் சிவராசா.
யா/ந/6483 திருமதி.கமலாம்பிகைபொன்னுத்துரை.
யா/ந/6487 திரு. முருகேசு மயில்வாகனம்.
யா/ந/6508 திருமதி. புஸ்பராணி இளையதம்பி.
யா/ந/6534 திருமதி. சிவபாக்கியம் கந்தசாமி.
யா/ந/6551 திரு. செல்லையா சண்முகலிங்கம்.
யா/ந/6571 திருமதி. பாக்கியம் கனகலிங்கம்.
யா/ந/6583 திரு. வீரசிங்கம் சகாதேவசங்கரி.
யா/ந/6606 திரு. நல்லதம்பி கிருஷ்ணபிள்ளை.
யா/ந/6608 திரு. சபாரத்தினம் சண்முகராசா.
யா/ந/6611 திரு. சதாசிவம் மூத்ததம்பி.
யா/ந/6639 திருநடராஜக்குருக்கள்இராமகிருஷ்ணசர்மா.
யா/ந/6640 திருமதி. சுகிர்தம்மா சிவானந்தன்.
யா/ந/6641 திருமதி. நாகம்மா முருகேஸ்.
யா/ந/6658 திரு.தம்பிராசா சண்முகநாதன்.
யா/ந/6694 திரு. வல்லிபுரம் சிவலிங்கம்.
யா/ந/6696 திரு. ஐயம்பிள்ளை அமரசிகாமணி.
யா/ந/6715 திருமதி. கனகம்மா தளையசிங்கம்.
யா/ந/6723 திரு. சேனாதிராஜா சிவராஜா.
யா/ந/6724 திரு. முருகேசு துரைராஜசிங்கம்.
யா/ந/6730 திரு. இராஜசிங்கம் சிவதாஸ்.
யா/ந/6732 திருமதி.சிவஞானசுந்தரிபொன்னையா.
யா/ந/6779 திருமதி. பத்மாவதி குமாரசாமி.
யா/ந/6811 திருமதி. கனகம்மா நல்லையா.
யா/ந/6827 திருமதி. சுகிர்தம் மகேசன்.
யா/ந/6854 திருமதி. சரஸ்வதி ஐயாத்துரை.
யா/ந/6865 திரு. ஆறுமுகம் சவுந்தரராஜா.
யா/ந/6872 திருமதி. புஸ்பராணி முருகேசு.
யா/ந/6893 திருமதி.கமலாம்பிகை யோகேந்திரன்.
யா/ந/6905 திரு.சுப்பிரமணியம் பாலகிருஸ்ணன்.
யா/ந/6910 திரு.ஐயம்பிள்ளை யாதவராசன்.
யா/ந/6925 திரு. நாகன் கனகசபை.
யா/ந/6934 திரு. குழந்தை குப்புசாமி.
யா/ந/6987 திருமதி. செல்லம்மா நடேசு.
யா/ந/7003 திருமதி. தவமணிதேவி பூபாலசிங்கம்.
யா/ந/7049 திரு. அருளம்பலம் குகதாசன்.
யா/ந/7058 திருமதி. கண்மணி பொன்னு.
யா/ந/7060 திரு. சுந்தரம் சங்கரலிங்கம்.
யா/ந/7070 திரு. இராசரத்தினம் இராசநாதன்.
யா/ந/ 7073 திருமதி. நேசமணி குமாரசாமி.
யா/ந/7080 திருமதி. பாக்கியம் முத்து.
யா/ந/7095 திருமதி. நாகரத்தினம் குலசேகரம்.
யா/ந/7098 திருமதி.தங்கரத்தினம்கோபாலசிங்கம்.
யா/ந/7102 திருமதி. பத்மாவதி வேலுப்பிள்ளை.
யா/ந/7124 திரு. தம்பிஐயா குணநாயகம்.
யா/ந/7127 திருமதி. விஜயலஷ்மி சரவணமுத்து.
யா/ந/7146 திருமதி. கனகம்மா சின்னப்பா.
யா/ந/7164 திருமதி. இந்திரா சவுந்தரநாயகம்.
யா/ந/7172 திருமதி. அன்னபூரணம் கனகராசா.
யா/ந/7174 திருமதி. யோகம்மா காளிதாஸ்.
யா/ந/7208 திருமதி. மனோன்மணி பரராசசிங்கம்.
யா/ந/7234 திருமதி. மணி கனகலிங்கம்.
யா/ந/7255 திருமதி. நல்லம்மா சிவபாக்கியன்.

(தொடரும்...)


# முதலாவது ஒரு நாள் போட்டி இந்தியா அபார வெற்றி!



சிறிலங்காவுடனான முதலாவது ஒரு நாள் போட்டியில் 152ஓட்டங்களினால் இந்திய அணி அபார வெற்றி பெற்றுள்ளது.

நாக்பூரில் நேற்று நடைபெற்ற வீடியோக்கோன் வெற்றிக் கிண்ணத்துக்கான ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் சர்வதேச போட்டியில் முதல் போட்டியில் இந்தியா அணி இவ்வெற்றியைப்பெற்றுள்ளது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா அணியின் தலைவர் ராகுல் ராவிட் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். இதற்கமைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக சச்சின் டெண்டுல்கரும், சேவாக்கும் களமிறங்கினர். கடந்த ஆறு மாதங்களாக போட்டிகளில் பங்கேற்காத சச்சின் ரசிகர்களை திருப்திப்படுத்தும் வகையில் அவர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யவரா என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் அணி 41 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் வாசின் பந்து வீச்சில் சேவாக் 20 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அடுத்து சச்சின் டெண்டுல்கருடன் வேகப் பந்து வீச்சாளர் இர்பான் பதான் இணைந்தார். சச்சின் டெண்டுல்கர் ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் தனது பழைய பாணியிலான ஆட்டத்தை வெளிப்படுத்தும் வகையில் ஆட ஆரம்பித்தார். இர்பான் பதானும் அவருக்கு ஏற்ற வகையில் ஆடி வந்தார். இருவரும் சிறப்பான முறையில் ஆடி இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்ததுடன் சிறிலங்காப் பந்து வீச்சாளர்களை அதிக சிரமத்திற்கும் ஆளாக்கியிருந்தனர். இந்த நிலையில் அணி 205 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் டில்சானின் பந்து வீச்சில் ஜெயவர்த்தனவிடம் பிடிகொடுத்து இர்பான் பதான் ஆட்டமிழந்தார். 161 ஓட்டங்களை இணைப்பாட்டமாகக் கொண்ட இந்த இணை பெற்றிருந்தது. பதான் நான்கு ஆறு ஓட்டம் எட்டு நான்கு ஓட்டம் அடலங்கலாக 70 பந்துகளில் 83 ஓட்டங்களைப் பெற்றதுடன், தனது மூன்றாவது அரைச்சதத்தையும் பூர்த்தி செய்தார். அடுத்து யுவராஜ்சிங் களமிறங்கினார். மிகவும் சிறப்பாக துடுப்பாடிக் கொண்டிருந்த சச்சின் 93 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். அவர் ஆட்டமிழந்தபோது அணி 207 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சச்சின் இரண்டு ஆறு ஓட்டம், ஒன்பது நான்கு ஓட்டம் அடங்கலாக 93 ஓட்டங்களைப் பெற்றார். அடுத்து அணியின் தலைவர் ராகுல் ராவிட் களமிறங்கினார். அணி 247 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் யுவராஜ் சிங்கும் 17 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அடுத்து வந்த





அகர்கார் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். அடுத்து டோணி களமிறங்கினார். இந்த நிலையில் இந்திய அணியின் ஓட்ட வேகத்தில் சற்று மந்த நிலை ஏற்பட்டதாயினும் ராகுல் ராவிட்டின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இந்தியா அணி இறுதியில் ஆறு விக்கெட்டை இழந்து 350 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ராகுல் ராவிட் ஒரு ஆறு ஓட்டம், எட்டு நான்கு ஓட்டம் அடங்கலாக 63 பந்துகளில் 85 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். டோணி 38 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 351 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சிறிலங்கா அணி பத்து ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அணியின் தலைவர் அத்தப்பத்து ஆட்டமிழந்தார். இந்த நிலையில் ஜெயசூரியவுடன் இணைந்த சங்கக்கார இணை மிகவும் சிறப்பாக ஆடி வந்தது. பத்து ஓவர்கள் நிறைவில் 74 ஓட்டங்களைப் பெற்று இந்திய கேப்பந்து வீச்சாளர்களுக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத் தியிருந்தது. ஆனால், ஹர்பஜன்சிங் மற்றும் முரளி கார்த்திக் ஆகியோரின் சிறப்பான பந்து வீச்சில் நிலை குலைந்த சிறிலங்கா அணி அடுத்தடுத்து விக்கெட்டை இழந்து படுதோல் வியைச் சந்திக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போது ஒன்பதாவது விக்கெட் இணை சிறிலங்கா அணியின் கௌரவமான தோல் விக்கு இட்டுச்சென்றது. இறுதியில் 35.4 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சங்கக்கார 37 பந்துகளில் 43 ஓட்டங்களையும், வாஸ் 52 பந்துகளில் 37 ஓட்டங்களையும், ஜெயசூரிய 28 பந்துகளில் 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஹர்பஜன்சிங், முரளி கார்த்திக் தலா மூன்று விக்கெட்டுக்களை கைப்பற்றினர். இப்போட்டி ஆட்டநாயகனாக அணியின் தலைவர் ராகுல் ராவிட் தெரிவானார்.

# செஞ்சுரி அடித்ததால் எதையும் எதிர்பார்க்கவில்லை

## இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி



நான் செஞ்சுரி அடித்ததால் எதையும் எதிர் பார்க்கவில்லை'என்று கங்குலி கூறினார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கங்குலி கையில் காயம் அடைந்து சிகிச்சை பெற்று வந்தார். இதனால் இந்தியா - இலங்கை இடையே நடைபெறவுள்ள முதல் இரண்டுஒரு நாள் போட்டிகளுக்கு கங்குலி சேர்த்துக்கொள்ளப்படவில்லை. அவர் தலைவர் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டார். புதிய தலைவராக ராவிட் தேர்ந்தெடுக் கப்பட்டார்.

இந்த நிலையில் ராஜ்கோட் நகரில் துலீப் கோப்பை போட்டி நடந்தது.

அதில் கிழக்கு மண்டலம் அணிக்கு தலைவராக கங்குலி களம் இறங்கினார். சிறப்பாக துடுப்பாடி 117 ஓட்டம் குவித்தார். இதனால் கங்குலி பழைய நிலைக்கு திரும்பிவிட்டதாக அவருடைய ஆதரவாளர்கள் ஆனந்தம் அடைந்தார்கள்.

இந்திய அணியில் கங்குலிக்கு மீண்டும் இடம் கிடைக்கும் என்கிறபேச்சு பரபரப்பாக அடிபட்டு வருகிறது. இந்த நிலையில் நேற்று முன்தினம் கங்குலி கொல்கத்தாவில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அணியில் சேர்க்கப்படுவதற்கான வாய்ப்பு உள்ளதா? என்று கேட்டபோது 'தான் இது பற்றி எதுவும் சொல்ல விரும்பவில்லை. தேர்வுக்குழுவினர் தான் முடிவு செய்ய வேண்டும். துலீப் கோப்பை போட்டியில் நன்றாக ஆடியிருப்பதோடு சதமடித்ததும் மிகவும் மகிழ்ச்சியை அளித்துள்ளது. அதை வைத்து வேறு எதையும் தான் எதிர்பார்க்கவில்லை. போட்டியில் வெற்றி பெறுவதுதான் எனக்கு மகிழ்ச்சியைத்தரும்' என்றும் கூறியுள்ளார்.




# சானியாவுக்கு அன்பளிப்பு



இந்தியாவின் டென்னிஸ் இளம் புயல் சானியா மிர்சாவுக்கு ஹூண்டாய் கார் நிறுவனம் 'கெட்ஸ்' ரக காரை நேற்று முன் தினம் பரிசளித்தது.

ஹைதராபாத்தில் நடந்த விழாவில் பரிசுக்காரின் சாவியை சானியாவிடம் ஹூண்டாய் இந்தியா நிறுவன துணைத் தலைவர் பாசின் வழங்கினார். இளைஞர்களைக் கவரும் நோக்கில் கெட்ஸ் ரக கார் உள்ளது. அதே ரக காரை நாட்டின் இளமைக்கு அடையாளமான சானியாவுக்கு அளிப்பது மிகப்பொருத்தம். ஹூண்டாய் நிறுவன தூதராக இருக்கும் அவருக்கு கார் பரிசளிப்பதில் பெருமை அடைகிறோம். நாட்டின் டென்னிஸ் நம்பிக்கை நட்சத்திரமான அவர் மேலும் சாதனைகள் படைக்கவும், இளைஞர்களின் பிரதிநிதியாக பெயர் பெறவும் வாழ்த்துகிறோம் என்று பாசின் அப்போது கூறினார். காரில் அமர்ந்த சானியா, புதிய பரிசு கிடைத்ததில் மகிழ்ச்சி.அதில் ஹைதராபாத் முழுவதும் சுற்றி வருவேன் என்றார்.

# தரவரிசைப் பட்டியலில் சானியா பின்னடைவு!

உலக டென்னிஸ் வீராங்கனைகள் தரவரிசையில் சானியா மிர்சா 34ஆவது இடத்துக்குப் பின்னடைவாகி இருக்கிறார்.

இந்தியாவின் இளம் டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா. ஆக்ரோஷமான ஆட்டத்தின் மூலம் அபாரமான வெற்றிகளைப் பெற்ற சானியா ஜப்பான் ஓபன் போட்டியில் அரையிறுதி வரை முன்னேறினார். இதனால் அவர் உலக டென்னீஸ் பெண்கள் ஒற்றையர் தர வரிசையில் உயர்ந்த பட்சமாக 31 ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

அதன்பிறகு நடந்த தாய்லாந்து ஓபன் போட்டியில் சானியா தசைப்பிடிப்பு காரணமாக இரண்டாவது சுற்றில் விலகினார். இதன் காரணமாக கடந்தவாரம் வெளியிட்ட தரவரிசையில் சானியா ஒரு இடம் பின்தங்கி 32ஆவது இடத்தைப் பெற்றார்.

இந்த நிலையில் நேற்று வெளியிடப்பட்ட தரவரிசைப்பட்டியலில் சானியா இரண்ட இடங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டு 34ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். மற்ற இந்திய வீராங்கனைகள்



தர வரிசையில் முன்னேறியுள்ளனர். ஷிகா ஒபராய் 145ஆவது இடத்தையும், ருஷ்மி 411ஆவது இடத்தையும், சானா பாம்ப்ரி 471ஆவது இடத்தையும் பெற்றனர்.

இரட்டையர் பிரிவில் லியாண்டர்பயஸ் 11ஆவது இடத்துக்கு முன்னேறி இருக்கிறார். மகேஷ் பூபதி 15ஆவது இடம் வகிக்கிறார்.

ஒற்றையர் பிரிவில் ஹாஷ் மங்கட் பிரகாஷ் அமிர்தராஜ், ரோகன், பொபண்ணா ஆகியோர் தர வரிசையில் பின்தங்கி இருக்கிறார்கள்.

# நான் பயிற்சியளிக்கும் வீராங்கனை ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வார் - பி.டி. உஷா

2012 ஒலிம்பிக்கில் நான் பயிற்சி கொடுக்கும் வீராங்கனை நிச்சயம் பதக்கம் வெலவார் என்று பி.டி.உஷா கூறியுள்ளார்.

இந்தியாவின் தங்கமங்கை என்று புகழ்பெற்றவர் பி.டி.உஷா. மெய்வல்லுனர் போட்டிகளில் அவர் சர்வதேச அளவில் பங்கேற்று பதக்கங்களை வென்றார். பி.டி.உஷா, ஓய்வுபெற்ற பிறகு இளம் வீராங்கனைகளை தேர்வு செய்து பயிற்சிஅளித்து வருகிறார். அந்தப் பயிற்சிப்பள்ளியில் நிறைய மாணவிகள் சேர்ந்துள்ளனர்.

தான் பயிற்சி அளிக்கும் வீராங்கனைகளை முதல் இடத்துக்குக் கொண்டுவர வேண்டும். போட்டிகளில் வெற்றிகளைக் குவிக்கச் செய்ய வேண்டும் என்பதில் பி.டி.உஷா மிகவும் ஆர்வமாக இருக்கிறார்.

நேற்று புவனேஷ்வரில் அகில இந்தியா ரெயில்வே மெய்வன்மை சம்பியன்ஷிப் போட்டிகள் நடந்தன. அதை நேரில் பார்வையிட பி.டி.உஷா வந்திருந்தார்.

அப்போது "நான் சிறந்த இளம் வீராங்கனைகளைத் தேர்தெடுத்து பயிற்சி அளித்து வருகிறேன். அப்படி பயிற்சி பெறும் வீராங்கனைகளில் ஒருவரை 2012 ஒலிம்பிக்கில் நிச்சயமாக பதக்கம் வெல்ல வைப்பேன்.அந்தளவுக்கு இரவு-பகலாக பயிற்சி அளிக்க முடிவு செய்திருக்கிறேன். அகில இந்தியா ரெயில்வே மெய்வன்மைப் போட்டிகள் கலிங்கா மைதானத்தில் நடைபெறவுள்ளது. அங்கு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் எனக்குத் திருப்திஅளிக்கிறது என்றும் பி.டி.உஷா கூறினார்.

# பாக்.குடனான தொடர் மிகவும் கடினதாக இருக்கும்

**மைக்கல்வோன்**

பாகிஸ்தானுடனான கிரிக்கெட்தொடர் மிகக்கடினமானதாக இருக்குமென இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல்வோன் தெரிவித்துள்ளார். தனது அணி கடந்த இரு வருடங்களாக சிறப்பாக போட்டிகளில் ஆடி வருகின்றபோதும் பாகிஸ்தானுடன் இதுவரை இந்த அணி வெல்ல வில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தனது வீரர்களுக்கு பாகிஸ்தான் அணி புதியது எனப் பயிற்றுனர் பிளச்சர் தெரிவித்துள்ளார்.இங்கிலாந்து மைதானங்களை விட பாகிஸ்தான் மைதானங்கள் சற்று வித்தியாசமானது என்று குறிப்பிட்டுள்ள அவர் தனது அணி கைகொள்ளும் ரிவர்ஸ்விங் பந்து வீச்சு முறையை அவர்களும் கையாண்டால் போட்டிகள் விறுவிறுப்பாக இருக்கும் என்றார்.

# யாழ். கோட்ட மட்ட உதைபந்தாட்டப்போட்டிகள்

(நல்லூர்)

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற உதைப்பந்தாட்டப்போட்டிகளில் 14 வயதுப் பிரிவில் ஏழாலை சிறி முருகன் வித்தியாலயமும் 16,18 வயதுப் பிரிவில் கந்ரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இப்போட்டிகள் இடம்பெற்றன.

14 வயதுப் பிரிவில் சுன்னாகம் மயிலணி சைவ மகாஜனா வித்தியாலயமும் ஏழாலை சிறி முருகன் வித்தியாலயமும் மோதிக் கொண்டன. சிறி முருகன் வித்தியாலயம் 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் சைவ மகாஜனாக் கல்லூரியை வெற்றி கொண்டு சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.


16வயதுப் பிரிவில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

தமிழ் கந்தையா வித்தியாலயத்தை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 2-0 என்ற கோல்களினால் வெற்றி கொண்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டன.

18 வயதுப்பிரிவில் ஏழாலை சிறி முருகன் வித்தியாலயமும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் மோதிக்கொண்டன. மிகவும் விறுவிறுப்பாக இரு அணிகளும் ஆட்டம் ஆரம்பமாகிய நேரம் முதல் இறுதி விளையாடியதன் மூலம் ரசிகர்களின் பாராட்டை இரு அணி களும் பெற்றுக்கொண்டன.

ஆட்டமுடிவில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் சிறிமுருகன் வித்தியாலயத்தை வெற்றிகொண்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டன.

வலய மட்டத்தில் இடம்பெறவுள்ள போட்டிகளில் இவ்வணிகள் விளையாடத்தகுதிபெற்றுள்ளன. (41)



## சிந்தனைக்கு

சிங்கள அரசின் திட்டமிட்ட ஒடுக்கு முறை காரணமாகவே நாம் சுயநிர்ணய உரிமைக்காகவும், அரசியல் சுதந்திரத் திற்காகவும் போராட்டத்தில் குதித்தோம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 26.10.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# "சிறிலங்காவிற்கான" தேர்தல்!

சனாதிபதித்தேர்தலில் தமிழ்மக்கள் எடுக்கப்போகும் நிலைப் பாடு என்ன? அவர்கள் யாரை ஆதரிக்கப் போகின்றார்கள்? என்ற கேள்வி இன்று பரவலாக சிறிலங்கா அரசியல் வட்டாரத்தில் மட்டுமல்ல, சர்வதேச மட்டத்திலும் எழுப்பப்படும் கேள்விகளாகவே உள்ளன.

இத்தேர்தலைப் பொறுத்து விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழ் மக்களே இது குறித்த தீர்மானத்தை எடுப்பார்கள் என்று கூறி விட்டது. அதாவது இத் தேர்தலில் விடுதலைப்புலிகள் மக்களை வழிப் படுத்தவோ, மக்களிடம் கோரிக்கை எதையும் முன் வைக்கவோ இல்லை.

ஆனால் தமிழ்மக்களைப்பொறுத்து இத் தேர்தலில் வாக்களிக்க வேண்டுமா? அவ்வாறு வாக்களிப்பதானால் யாரை ஆதரிப்பது அன்றி தேர்தலே வேண்டாம், இது இலங்கையின் தேர்தலாக அல்லாமல் சிறிலங்காவிற்கான தேர்தலாகவே இருந்து விட்டுப் போகட்டும் என்ற நிலைப்பாட்டுடன் காணப்படுகின்றனரா? என்பதே முக்கியமான கேள்வியாகவுள்ளன.

கடந்த கால வரலாற்றைக் கொண்டுபார்த்தால் தமிழ் மக்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளருக்கோ அன்றி ஐக்கியதேசியக்கட்சியின் வேட்பாளருக்கோ வாக்களிக்க முடியாது. ஏனெனில், இவ்விருகட்சிகளுமே தமிழ்மக்கள் மீதான ஒடுக்கு முறையை தம்மால் இயன்றளவு மேற்கொண்ட கட்சிகளாகும்.

அதாவது அரசியல் யாப்பு ரீதியிலும் சரி, இராணுவ ரீதியிலும் சரி இவ்விரு கட்சிகளும் தம்மால் இயன்ற அளவுக்கு ஒடுக்கு முறைக்கு வழி செய்தவையே ஆகும். எடுத்துக்காட்டாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி 1972ஆம் ஆண்டு குடியரசு அரசியல் யாப்பின் மூலம் சிறுபான்மை இனங்களுக்கு அரசியல் யாப்பு ரீதியில் இருந்த பாதுகாப்பை இல்லாது ஒழித்ததெனில், ஐ.தே.கட்சியோ பயங்கரவாத தடைச்சட்டத்தைக் கொண்டுவந்து தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளையே இல்லாதொழித்ததெனலாம்.

இது தவிர இவ்விருகட்சிகளுமே கடந்த நூற்றாண்டின் இறுதி மூன்று தசாப்த காலத்திலும் பெரும்பாலான காலப்பகுதியை அவசர காலச்சட்டத்தின் கீழ் ஆட்சி செய்தவையாகும். அதாவது தமிழர் மீதான ஒடுக்கு முறைக்கென இச்சட்டம் பயன்படுத்தப்பட்டது. இச்சட்டத்திற்கு அவ்வவ்வேளையில் ஆளும் கட்சியோ அன்றி ஆளும் கூட்டணியோ மட்டும் தான் ஆதரவாக இருந்தன என்றில்லை. எதிர்க்கட்சி வரிசையில் இருந்ததோரும் இதற்கு ஆதரவாகவே இருந்தனர்.

இந்த வகையில் அரசியல்யாப்பு ரீதியிலான ஒடுக்குமுறைகள் இருக்கையில் இன்னொருபுறத்தில் இரண்டு பிரதான கட்சிகளுமே தமிழ்மக்கள் மீது பாரிய யுத்தங்களை நடத்தியவை என்பது மட்டுமல்ல பெரும் இன அழிப்பு நடவடிக்கையும் மேற்கொண்டவை தான்.

இந் நிலையில் இக் கட்சிகளின் வேட்பாளராக எவர் இருப்பினும் அவர்களைத் தமிழ் மக்கள் எவ்வாறு ஆதரிக்க முடியும்? இதைத் தவிர கடந்த கால வரலாற்றைத்தான் ஓரம் தள்ளி வைத்துவிட்டு தற்பொழுது யாருக்காவது வாக்களிக்க முடியுமா? எனச் சிந்திப்பினும் அதற்கும் பொருத்தப்பாடானவர்களாக எவரும் உள்ளனரா என்பது கேள்விக்குரியதே.

ஐ.தே.கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை எடுத்துக் கொண்டால் அவர் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் எனக்கூறிக்கொண்டாலும், பேச்சுவார்த்தை மேசையில் நம்பிக்கை அளிக்கக் கூடிய விடயங்களை முன்வைப்பார் என எதிர்பார்ப்பதற்கு இல்லை. அத்தோடு பேச்சுவார்த்தையில் ஒருவாறு இணக்கம் காணப்படினும் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும் எனக் கூறுவது இணக்கம் காணப்பட்ட விடயங்களை நிராகரிப்பதற்கான வழிவகைகளாகவே இருக்கும்.

அடுத்ததாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவோ, இனப்பிரச்சினைத் தீர்விற்கு சமஷ்டி ஆட்சி முறைக்கே உடன்பாடற்றவராகவுள்ளார். இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறையின் கீழ் சர்வதேச நாடுகளின் தலையீடு எதுவுமின்றி தீர்வு என்று கூறுகின்றார். இதனை வேறுவிதமாகக் கூறுவதானால் இனப்பிரச்சினைத் தீர்விற்கு யுத்தமே வழி எனக் கூறுவதாய் உள்ளது. அவரின் கூட்டணியில் ஜே.வி.பி.யும், ஜாதிக ஹெல உறுமயவும் இருப்பதினால் மேற்கூறிய கருத்துக்கள் வலுப்படுபவையாகவே உள்ளன.

இந்தவகையில் இத் தேர்தலில் வாக்களிப்பதால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் எதுவும் தீர்வதற்கான சமிக்ஞை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகையினால் இத்தேர்தலில் வாக்களிக்கத்தான் வேண்டுமா? என்ற கேள்விக்கு விடை காண்பது சிரமமானதாகவே இருக்கும். இந்த நிலையில் இத்தேர்தல் சிறிலங்காவிற்கானதாகவே இருந்து விட்டுப் போகட்டும் என்ற மனநிலை தமிழ் மக்கள் மனங்களில் எழுவதற்கே வாய்ப்பு அதிகமாகும்.




# பண்டாரநாயக்க வம்சத்தைக் காக்க அநுரா ஐ.தே.க.வின் உதவி கோரல்!

## ரணிலுடன் விரைவில் ஆலோசனை

(கொழும்பு)

பண்டாரநாயக்க வம்சத்தை அழிவிலிருந்து காக்க ஐக்கிய தேசியக் கட்சியின் உதவியை அநுரா பண்டார நாயக்க நாடுவதாகத் தெரியவந்துள்ளது. தற்போது உல்லாசத்துறை மற்றும் வெளிநாட்டமைச்சராகப் பதவி வகிக்கும் அநுரா பண்டாரநாயக்க சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கும் சில மூத்த உறுப்பினர்கள் அக்கட்சீன் அழிவுக்குத் திட்டம் தீட்டுவதாகவும் அதிலிருந்து அக் கட்சியையும் பண்டாரநாயக்க வம்சத்தையும் காப்பாற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் உதவி தேவைப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியை உருவாக்கியவர்கள் என்ற வகையில் யாராலும் பண்டாரநாயக்கர்களை அழிக்கவோ, நீக்கவோ முடியாது. அப்படி யாராவது முயற்சிக்கும் பட்சத்தில் கட்சிக்குள்ளிருந்து பலவித திட்டங்களையும் வகுக்கும் சிலரின் அந்தரங்கங்களை வெளியிடவும் தான் தயங்கப்போவதில்லை எனவும் மிரட்டல் விடுத்துள்ளார்.

தற்போதைய சனாதிபதியாக உள்ள தனது சகோதரியோ அல்லது தானோ யாருடைய அச்சுறுத்தலுக்கும் பயப்படப்போவதில்லை என்று தெரிவித்துள்ள அநுரா ஐக்கிய தேசியக் கட்சியின் உதவியுடன் அனைத்து அச்சுறுத்தல்களையும் முறியடிக்கத்தான் முடிவெடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். இந்த நிலையில் விரைவில் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தான் சந்தித்து இது குறித்து ஆலோசிக்கவுள்ளதாகத் தெரிவித்ததாகத் தகவல்கள் வெளியுள்ளன. (32)

# பாரிய குற்றச்செயல்களுடன் தொடர்புடைய படையினரின் சிறையுடைப்பு முயற்சி முறியடிப்பு

(கொழும்பு)

கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு ஆகிய குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக கேகாலைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 16 இராணுவத்தினர் கொண்ட குழுவொன்று அந்தச் சிறையிலிருந்து தப்பிச் செல்வதற்கு எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தப்பிச் செல்லவுள்ள திட்டம் பற்றிய தகவல்கள் ஏற்கனவே வெளியாகியதால் அவர்களின் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை அதிகாரிகளையும், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளையும் தாக்கிவிட்டு ஆயுத அறைக்குள் புகுந்து ஆயுதங்களை எடுத்துக் கொண்டு ஞாயிறு இரவு சிறைச்சாலை வாகனத்தில் தப்பிச் செல்ல அவர்கள் திட்டமிட்டிருந்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து இது தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்து கேள்விப்பட்டதையடுத்து சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ரூமி மர்சூக் நேற்று முன்தினம் காலை கேகாலை சிறைச்சாலைக்குச் சென்று விசாரணைகளைத் தொடங்க உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சுமார் 25 கைதிகளை போகம்பறைச் சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு சிறைச்சாலை ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கேகாலை பொலிசாரும், கேகாலை சிறைச்சாலை அதிகாரியும் தனித்தனியே விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# முத்திரை இலட்சினையை அகற்றி மீண்டும் பயன்படுத்தும் மோசடி அம்பலம்!

(கொழும்பு)

முத்திரைகளில் பொறிக்கப்படும் இலட்சினையை இரசாயனப் பொருட்களைக் கொண்டு அகற்றி விட்டு அவற்றை மீண்டும் பயன் படுத்தும் நடவடிக்கைகள் பற்றி இரகசியப் பிரிவுப் பொலிசாருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

போலி முத்திரை அச்சிடல் பற்றி விசாரணைகளை நடத்திவரும் இரகசியப் பிரிவினர் இந்த நடவடிக்கைகளைக் கண்டறிந்துள்ளனர்.

இரசாயனத் திரவத்தைப் பயன் படுத்தி பொறிக்கப்பட்டிருக்கும் இலட்சினைகளை அகற்றிவிட்டு அவற்றை மீண்டும் பயன்படுத்தி காணி உறுதிகள் பதிவு செய்யப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்படிப் பதிவு செய்யப்பட்ட 35 காணி உறுதிகளைக் கொழும்பு காணிப்பதிவாளர் காரியாலயத் திலிருந்து இரகசியப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

ஒரு வருடத்திற்கு அரசாங்கத்திற்குப் பல கோடி ரூபா இழப்பை ஏற்படுத்தும் போலி முத்திரை நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காகப் பல குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக இரகசியப் பொலிஸ் பிரதி பொலிஸ்மா அதிபர் லயனல் குணதிலக்க தெரிவித்துள்ளார்.

காணி உறுதிகளை எழுதுகையில் வங்கிக்குப் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டுக்களைப் போல போலியான பற்றுச்சீட்டுக்களை வடிவமைத்து 70 இலட்ச ரூபாவை மோசடி செய்தமை தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன. அதனுடன் தொடர்புடைய 460 உறுதிகள் தெஹிவளை காணிப் பதிவாளர் காரியாலயத்தில் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாகவும் இரகசியப் பிரிவினர் தெரிவித்தனர்.

# லஞ்சம் பெற்ற சிறைச்சாலை பொறுப்பதிகாரி கைது!

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவருக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்காக லஞ்சம் பெற்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட சிறைச்சாலை பொறுப்பதிகாரி ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சந்தேகநபரை எதிர்வரும் ஏழாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிமன்ற நீதிவான் சரோஜினி குசலா வீரவர்த்தன உத்தரவிட்டார். (32)

# தமிழ் நாட்டில் பெரும் வெள்ள அபாயம்;

# 1000கிராமங்கள் நீரில் மூழ்கின!

## - 60இற்கு மேற்பட்டோர் பலி; சிறிரங்கம் மூழ்கும் அபாயம்



(சென்னை)

தமிழ் நாட்டில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாகவும், கன்னடமாநிலத்தில் பெய்துவரும் கனமழை காரணமாகவும் அணைகளிலிருந்து காவிரியில் மழை நீர் திறந்து விடப்பட்டுள்ளதாலும் தமிழகத்தில் பெரும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதுவரையில் காவிரியை அண்டியுள்ள 11 மாவட்டங்களில் உள்ள சுமார் ஆயிரம் வரையிலான கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளதாகவும் தமிழகத்திலுள்ள அணைகளில் இருந்து நீர் பெருமளவு திறந்து விடப்பட்டுள்ளதால் ஆறுகள் கரை புரண்டோடுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேசமயம் இது வரையில் 60 பேர் வரையில் மழைவெள்ளத்தில் பலியாகியிருப்பதாகவும், பத்து இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத்தவிர திருச்சி நகரின் ஒரு பகுதி வெள்ளத்தில் மூழ்கியிருப்பதாகவும், சிறிரங்கம் முற்றிலும் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு திருச்சி, தஞ்சை, சிறீபெரும்பத்தூர் போன்ற மாவட்டங்கள் வெள்ள அபாயத்தை எதிர்நோக்கியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வங்கக்கடலின் தென்மேற்கில் குறைந்த காற்றழுத்த மையம் ஒன்று உருவாகி பலமடைந்து வருவதினால் மேலும் சில தினங்களுக்குத் தமிழகத்தில் மழை நீடிக்கும் என இந்திய வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ள்து.

# விசேட சத்திர சிகிச்சை

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள மருத்துவர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் எதிர்வரும் 31.10.2005 தொடக்கம் 06.11.2005 வரை அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தரவிருக்கும் சத்திரசிகிச்சை நிபுணர் குழுவினால் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதில் பொது சத்திரசிகிச்சைகள், என்புமூட்டு சத்திரசிகிச்சைகள், பெண்நோயியல் சத்திர சிகிச்சை என்பன மேற்கொள்ளப்படவுள்ளன. குறிப்பாக கட்டிகள், கேணியா, மூலவருத்தம், நாளப்புடைப்பு, நீண்டநாட்கள் மாறாதபுண்கள், என்புமுறிவு கர்ப்பப்பை இறக்கம், அதிக இரத்தப்போக்கு போன்றவற்றிற்கு சத்திரசிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன.

வறிய மக்களுக்கு இலவசமாக சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன முற்கூட்டியே பதிவு செய்பவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளதால் பயன் பெறவிரும்புவோர் புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் தொடர்பு கொள்ளும்படி பணிப்பாளர் அறியத் தருகிறார். (கு.தீ)

# "சுனாமிச் சுவடுகள்" நூல் முல்லையில் வெளியீடு

தமிழீழ கடற்படையின் ஏற்பாட்டில் நாவண்ணனின் "சுனாமிச் சுவடுகள்" நூல் வெளியீட்டு விழா நேற்று பிற்பகல் 4.15 மணிக்கு முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. நிதர்சனப்போராளி வீரா தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பொதுச்சுடரினை சுனாமியினால் தனது மனைவி, பிள்ளைகளை இழந்த மணற்குடியிருப்பைச் சேர்ந்த வே.அன்ரனி ஜெராட் ஏற்றினார்.தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ கடற்படையின் சிறப்புத்தளபதி சூசை ஏற்றினார். விழாச்சுடரினை தமிழீழ கடற்படையின் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி பூரணி ஏற்றினார்.தொடர்ந்து வரவேற்புரையினையும், தலைமையுரையினையும் நிதர்சனப் போராளி வீரா நிகழ்தினார்.தொடர்ந்து சுனாமிச்சுவடுகள் நூலினை தமிழீழ கடற்படையின் சிறப்புத்தளபதி சூசை வெளியிட்டு வைக்க மணற்குடியிருப்பில் தமது உறவுகளை இழந்த வே.அன்ரன் ஜெராட் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து பலர் நூலை பெற்றுக்கொண்டனர். தொடர்ந்து சிறப்புரையினை தமிழீழ கடற்படையின் சிறப்புத்தளபதி சூசை வழங்கினார்.

நூல் பற்றிய மதிப்பீட்டுரையினை தமிழீழ தேசியத்தொலைக் காட்சிசேவைப்பணிப்பாளர் ச.கருணாகரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து நூலாசிரியர் கவிஞர் நாவண்ணன் கருத்து வழங்கினார்.இந்த நிகழ்வில் போராளிகள், மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (20)

### பிந்துனுவெவ...

வெளியிடப்பட்டடுள்ளது.

இதேவேளை இந்த அறிக்கை தொடர்பாக ஆசிய மனித உரிமை மையத்தின் இயக்குனரான சுகாட் சக்மா கூறுகையில்; விசாரணை ஆணைக்குழு இந்த அறிக்கையில் பொலிஸ் அதிகாரிகள் மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளதாகவும் அந்தக் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக அவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்குமாறாக அந்த அதிகாரிகளுக்குப் பல பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் சக்மா குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன் தடுப்புக்காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடந்துவதாற்காக வெளியிலிருந்து ஆட்கள் அழைத்து வரப்பட்டதாகவும் அவர்கள் அந்தத் தடுப்பு மையத்தில் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியபோது பொலிஸ் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்கு மாறாக அவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த தாகவும் சக்மா மேலும் கூறினார்.

இதேவேளை இந்த அறிக்கையின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுவிடம் இந்தப் பிரச்சினையை கொண்டு செல்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.

அத்தோடு இலங்கையில் வெளியிடப்படாத நிலையில் மனித உரிமை மையத்தினால் இந்த அறிக்கை டில்லியில் வெளியிடப்பட்டுள்ளமை தொடர்பாக இலங்கை சட்டத்துறை அமைச்சர் ஜோன் செனவிரட்ண கூறுகையில்; இந்தச்சம்பவம் தான் மந்திரிபதவி ஏற்பதற்கு முன்னர் நடைபெற்றதாகவும் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த அனைத்து பொலிஸ் அதிகாரிகளும் அந்த வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டு விட்டதாகவும் கூறிய அவர் இந்த விசாரணை ஆணைக்குழு அறிக்கை சனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமையால் இதனை வெளியிடுவது தொடர்பாக அவரே முடிவு செய்ய வேண்டுமெனவும் கூறினார்.

### சு.க.விற்கு...

அந்த பண்டாரநாயக்க குடும்பத்திற்கு எதிராக செயற்படுவதை அவதானிக்க முடிவதாகவும் அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

1975 ஆம் ஆண்டு கந்தானைத் தொகுதியில் இடம்பெற்ற இடைத்தேர்தலின் போது அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே காலில் செருப்புடன் துவிச்சக்கரவண்டி ஒன்றில் பிரச்சாரக் கூட்டத்திற்கு வந்திருந்தார்.

அதன் போது தாமே அவருக்கு பிரச்சாரக்கூட்டத்தில் பேச வாய்ப்பளித்ததாக அநுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

பின்னர் பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் அவருக்கு அமைச்சர் பதவியும் கிடைத்தது.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமான தீர்வு காணும் சனாதிபதியின் முயற்சி குறித்து ஜெயராஜ் பொணான்டோபுள்ளே சந்தேகம் வெளியிட்டுள்ளதாகவும் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித் துள்ளார்.

சிறிலங்கா சுதந்திர கட்சிக்கே உரித்தான பிரதமர் பதவியை வேறொருவருக்கு வழங்க சூழ்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நிலையில் மகிந்த ராஜபக்ஷவை சனாதிபதியாக தெரிவுசெய்வது மக்களே எனக் குறிப்பிட்டுள்ள அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தாம் சனாதிபதி பங்கேற்கும் மகிந்த ராஜபக்ஷவிற்கான ஆதரவுக் கூட்டங்களில் மாத்திரமே பங்கேற்கப் போவதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை தாம் ஒரு போதும் விமல் வீரவன்சவை பிரதமராக்க வேண்டும் எனக் கூறவில்லை என ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே தெரிவித்துள்ளார். (32)

# தடுப்புக் காவல் நீடிப்பு

(அலுவலக செய்தியாளர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் அனுமதியின்றி உள்நுழைந்த தன் காரணமாக விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவின் பேரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டடிருந்த சப் இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று சிறிலங்காப் பொலிசாருக்கும் கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதி மன்று நவம்பர் மாதம் 14ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

நேற்று பகல் கிளிநொச்சி காவல் துறையினரால் மேற்படி மூன்று சிறிலங்காப் பொலிசாரும் கிளிநொச்சி மாவட்ட நீதி மன்றில் முட்படுத்தப்பட்ட பொழுது கிளிநொச்சி நீதியாளர் செல்வி சாதனா மூன்று பொலிசாருக்குமான பிணையினை நிராகரித்ததுடன் தமிழீழ குற்றவியல் சட்டத்தின் பிரகாரம் விசாரணையினை மேற்கொள்ளும்படியும் எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி வரை மூன்று சிறிலங்காப் பொலிசாரையும் தடுப்புக் காவலில் வைக்கும் படியும் உத்தரவிட்டார் (சோ,லோ,ச)

# பிற்போடல்

நாளை வியாழக் கிழமை முற்பகல் 9.30,11.00 மணி ஆகிய நேரங்களில் நடைபெற விருந்த புதிய சாரதி அனுமதிப்பத் திரம் பெறுவதற்கான எழுத்துப்பரீட்சை எதிர்வரும் 2005.11.21 ஆம் திகதி திங்கட்கிழமை வழங்கப்பட்ட நேர ஒழுங்கில் நடைபெறுமென யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக் கள உதவி ஆணையாளர் அறிவித் துள்ளார்.

### தமிழ்....

களைச் செய்தும் உரிமைகள் பெற முடியாத நிலையில் ஏமாற்றம் அடைந்தனர்.

1976 இல் வரலாற்று முக்கியத்துவம் மிக்கதும் தமிழர்களின் தன்னாட்சிக்கு வலுச்சேர்ப்பதுமான வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனாலும் சிங்கள பௌத்த பேரினவாதம் அகிம்சை வழிகளில் இருந்து தமிழ் தேசிய இனத்தை புறந்தள்ளி மிரட்டியது. இலங்கைத் தீவு முழுவதும் தமக்கே சொந்தம் என்று அது அடம்பிடித்தது. அதனால இலங்கைத்தீவு என்பது எங்களுக்கும் சொந்தமானது என்ற தமிழர்களின் நியாயத்தை ஏற்க மறுத்தது.

தமிழர்களை இந்த மண்ணில் இருந்தே விரட்டியடிப்பதற்காய் இன வன்முறைகளையும், இராணுவ அடக்கு முறைகளையும் கட்ட விழ்த்து விட்டு தமிழர் தாயகத்தை சூறையாடியது. உயிர்களை கோரமாய் பலி எடுத்தது. அது மூர்க்கமாய் தமிழினத்தை தாக்கியது.

முதுபெருந் தமிழ்த்தலைவர் தந்தை செல்வா ஏமாற்றத்தின் விளிம்பில் நின்று கொண்டு "இனிமேல் தமிழ்மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்"என்றுரைத்தார்.

அந்தக் கால கட்டத்தில் தான் எமது இனத்தை ஆயுத முனையில் அழிக்க வந்த இராணுவத்தை திருப்பி அதே முறையில் தாக்க வேண்டிய ஒரு பெரும் தர்மத்தை தன் நெஞ்சிலே தாங்கிய படி கைகளில் ஆயுதம் தரித்த விடுதலைப் போராளியாய் தமிழ்தேசிய ஆன்மாவின் குறியீடாய் தமிழ்பேசும் மக்களின் தேசியத்தலைவராய் மேதகு வே. பிரபாகரன் உருவெடுத்தார்.

தமிழினம் அந்த ஒப்பற்ற தலைவரின் பின்திரண்டது. சிங்கள இராணுவத்தை திணற வைத்தது எமது பலம்.

ஈடுகொடுக்க முடியாத சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் எமது நியாயப் போரைப் பயங்கரவாதம் எனவும் எமது விடுதலைப் போராளிகளை பயங்கரவாதிகள் எனவும் உலக அரங்குகளிலே பிரச்சாரம் செய்தன.

தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கான மொழியை சரியாகப் படிக்கத் தவறிய சர்வதேச சமூகம் எமது விடுதலை இயக்கத்தை தடை செய்வதிலும் ஈடுபட்டது.

அப்போது நாங்கள் பொங்கு தமிழர்களாய் கிளர்ந்தெழுந்தோம் விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்லர். அவர்கள் எமது விடுதலையை வென்றெடுப்பதற்கான ஏகப் பிரதிநிதிகள் என்று முரசறைந்தோம்.

உலகம் உண்மையை உணரத் தொடங்கியது. சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்கவும் முற்பட்டது. இதன் விளைவாக யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன.

சிங்கள, பௌத்த பேரினவாத மனங்களில் மாற்றம் ஏற்படாததால் விடுதலைப்புலிகளை தமக்கு சமமாக ஏற்று பிரச்சினையைத் தீர்க்க முன்வர மறுத்தது.

சுனாமி மீள் நிர்மாணத்திற்கான பொதுக்கட்டமைப்பைக் கூட அனுமதிக்க முடியாதளவுக்கு சிங்கள பௌத்த பேரினவாதம் தலைவிரித்தாடியது.

தமிழ் தேசிய இனம் சிறிலங்கா அரசுகளின் மீதான நம்பிக்கையை முழுவதும் இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுக்கும் நிலைக்கும் உந்தப்பட்டது.

இந்த நிலையில் தான் 2005 யூலை-27 இல் எமது தாயகம், தேசியம், தன்னாட்சி என்பவற்றுக்கான போராட்டத்தை அங்கீகரிக்குமாறு சர்வதேச சமூகத்தைக் கோரும் வரலாற்று முக்கியம் மிக்க வவுனியாப் பிரகடனம் செய்யப்பட்டது

அதற்கு வலுச்சேர்க்கும் விதத்தில் தமிழர் தாயகம் எங்கும் மக்கள் எழுச்சி கொள்கின்றனர்.

நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வவுனியா வாழ் மக்கள் நகரசபை மைதானத்தில் திரண்டெழுகின்றனர். எமது தேசியக் கடமைக்காய் ஒரு பொழுதைச் செலவு செய்வது எம் ஒவ்வொருவரதும் தார்மீகக் கடமையல்லவா!

அன்றைய பொழுது எங்கள் தனிப்பட்ட வேலைகளை ஒதுக்கி வைத்துக் கொள்வோம். தமிழ் தேசியத்தின் விடுதலைக்காய் பொங்கி எழுந்து குரல் கொடுப்போம். எமது மாவட்டம் தேசிய விடுதலைக்காய் கோலங்கொள்ளட்டும். விரைவாக எங்கள் விடுதலையை வென்றெடுப்போம். (10)

### மாவீரரின்...

அடைந்த நிலையில் உள்ளனர். ஆகவே யாவற்றையும் கருத்தில் கொண்டு தெளிவுடன் செயற்படுமாறு வினையமாக வேண்டுகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

### வவுனியா...

கூடாது எனவும் தமிழ் மக்களின் தேசியக் கொடியான புலிக்கொடி ஏற்றப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தினையும் அது போர் நிறுத்த மீறல் அல்ல எனவும் படையினருக்கு எடுத்துக் கூறப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்துள்ளார். (10)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.